425

புகழ் மாலை

A Hymnal of Worship and Praise

தென் இந்தியத் திருச்சபை,
மதுரை-இராமநாதபுர அத்தியட்சாதீனம்.



MADRAS

Q6:4146
N58
113260

...ண்டாம் பதிப்பு

1958 [50 புதுக்காசு

ஆண்டவரே! என்னை உமது சமாதானத்தின
கருவியாக்கியருளும்.

பகைமையுற்ற இடத்தில் அன்பையும்,
தீங்குற்ற இடத்தில் மன்னிப்பையும்,
சந்தேகமுற்ற இடத்தில் விசுவாசத்தையும்,
நம்பிக்கையற்ற இடத்தில் நம்பிக்கையையும்,
இருளுள்ள இடத்தில் ஒளியையும்,
சஞ்சலமுள்ள இடத்தில் சந்தோஷத்தையும்,
விதைக்க எனக்கருள் புரியும்.
திவ்ய பிரபுவே!
ஆறுதல் அடைவதைவிட ஆறுதல் அளிப்பதையும்,
பிறரை விளங்க வைப்பதை விட
பிறரை விளங்கிக் கொள்வதையும்,
நேசிக்கப்படுவதைவிட நேசிப்பதையும் நான் நாட அருள்
புரியும்.

ஏனெனில்,

கொடுத்தலின் மூலம் பெற்றுக்கொள்ளுகிறோம்,
மன்னித்தலின் மூலம் மன்னிப்படைகிறோம்,
இறத்தலின் மூலம நித்யஜீவனுக்குள் பிறக்கிறோம்.
ஆமென்.

Francis of Assisi.

உண்மையுள்ள கடவுளே, உமது மேன்மைக்குத் தக்கதாக உமக்கு ஊழியம் செய்ய எங்களுக்குப் போதித்தருளும். நஷ்டத்தைக் கருதாது கொடுக்கவும், வெற்றி தோல்வியைக் கவனியாது போர்புரியவும், இளைப்பாறுதலைத் தேடாது முயலவும், உமது சித்தத்தைச் செய்கிறோம் என்று அறிவதையே அன்றி வேறு பிரதிப்பலனை நாடாது உழைக்கவும், போதித்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

Ignatius Loyola.

புகழ் மாலை

A HYMNAL

OF

WORSHIP & PRAISE

வெளியிட்டவர் :

தென் இந்திய திருச்சபை

மதுரை-இராமநாதபுர அத்தியட்சாதீனக்

கிறிஸ்தவ இலக்கியக் குழு

பன்னிரண்டாம் பதிப்பு

Price 50 nP.] 1958 [50 புதுக்காசு

பொருளடக்கம்

I. ஓய்வுநாள் காலை ஆராதனை முறை

II. வணக்க ஆராதனை

III பாடல்களின் முதல்வரி அகராதி

அடைக்கலம் அடைக்கலமே	....	65
அருமை ரட்சகா கூடிவந்தோம்	....	94
அலங்கார வாசலாலே	....	3
ஆமென் அல்லெலூயா	....	45
அனுக்ரக வார்த்தையோடு	....	148
அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும்	....	95
அன்பே பிரதானம்	....	81
ஆ! இன்ப காலமல்லோ ஜெபவேளை	....	74
ஆண்டவர் பங்காகவே தசமபாகம்	...	86
ஆதியாம் மகா ராஜனே	....	75
ஆத்தும ஆகாயம் செய்குவோமே	....	90
ஆத்துமமே என் முழு உள்ளமே	....	35
ஆராய்ந்து பாரும் கர்த்தரே	....	14
ஆரும் துணையில்லையே	....	110
வாரும் நாமெல்லாருங் கூடி	....	98
ஆவியை மழைபோலே யூற்றும்	...	52
ஆனந்தமே ஜெயா ஜெயா	....	96
ஆனந்தமே பரமானந்தமே	....	36
இத்தரை மீதினில் வித்தகனாய்யெழுந்த	....	47
இந்தக் குழந்தையை நீர்	....	93
இம்மட்டும் ஜீவன் தந்த	....	97

இவரே பெருமான்	... 48
இன்று கிறிஸ்து எழுந்தார்	 8
இன்றைத் தினம் உன் அருள்	 102
உந்தம் ஆவியே	... 51
உமமண்டை கர்த்தரே	 21
உம்மைத் துதிக்கிறோம்	 1
எங்கே சுமந்து போகிறீர்	 41
எத்தனை திரள் என் பாவம்	 61
எந்நாளுமே துதிப்பாய்	... 33
எருசலேம் என் ஆலயம்	 20
எல்லாம் ஏசுவே	 69
எல்லாருக்குமா உன்னத	 5
எழுந்தார் இறைவன்	 46
என் அருள்நாதா ஏசுவே	... 7
என் உள்ளங்கவர்ராய்	 44
என்தன் ஆத்ம நேசரே	 12
என் மீட்பர் உயிரோடிருக்கையிலே	 49
என்னோடிரும்	 15
என்னை ஜீவ பலியாய்	 72
என்னையும் உமதாட்டின்	 92
ஏசு கற்பித்தார் ஒளி வீசவே	 113
ஏசுநாயகா வந்தாளும	 107
ஏசு நேசிக்கிறார்	 70
ஏசுவையே துதிசெய் நீ மனமே	 32
ஏசுவைப்போல நட	 114

ஏதேனில் ஆதிமணம்	....	19
ஐயரே நீர் தங்கும்	....	105
ஐயனே உமது திருவடிகளுக்கே	....	103
ஐயையா நான் பாவி	....	60
ஒரு மருந்தரும் குருமருந்து	....	77
ஓசன்னா பாடுவோம்	....	40
ஓய்வுநாள் இது மனமே	....	37
கண்களை ஏறெடுப்பேன்	....	29
கர்த்தாவே யுக யுகமாய்	....	22
கல்வாரி மலையோரம்	....	43
கல்லும் அல்லவே காயம்	....	109
காணிக்கை தருவாயே	....	87
காரிருளில் என் நேச தீபமே	....	23
காலமே தேவனைத் தேடு	....	101
கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே	....	80
கிறிஸ்தவ இல்லறமே	....	116
சகோதரர்கள் ஒருமித்து	....	82
சத்தாய் நிஷ்களமாய்	....	25
சபையின் அஸ்திபாரம்	....	11
சரணம் நம்பினேன் ஏசுநாதா	....	100
சின்னச் சின்னப் பாலர் நாங்கள்	....	112
சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்	....	119
சீர் மிகு வான்புவி தேவா தோத்திரம்	....	27
சீர் திரி யேகவஸ்தே நமோ	....	26
ஜெப சிந்தை எனில் தாரும் தேவா	...	73

தந்தானைத் துதிப்போமே	....	88
தந்தேன் என்னை ஏசுவே	....	71
தந்தையே இந்தப் போஜனம்	....	115
தம்மண்டை வந்த பாலரை	...	17
தருணம் இதுவே கிருபை கூரும்	....	99
தாசரே இத்தாரணியை	....	89
தீய மனதை மாற்றவாரும்	..	54
துதிதங்கிய பரமண்டல	....	34
தூய தூய தூயா	...	10
தேவனே நான் உமதண்டையில்	....	66
தேவலோகமதில் சேவிப்பார்	....	111
தேவ பிதா எந்தன் மேய்ப்பனல்லோ	....	76
தேன் இனிமையிலும்	....	79
தோத்திரம் செய்வேனே	....	31
தோத்திரம் புகழ் கீர்த்தனம்	....	28
நம்பி வந்தேன் மேசையா	....	64
நான் பாவிதான்	....	13
நிச்சயம் செய்குவோம்	....	108
நித்தம்முயல் மனமே	....	83
நித்திய கன்மலே எனக்காய்	....	63
நீயுனக்குச் சொந்தமல்லவே	....	59
பக்தரே வாரும்	....	6
பயந்து கர்த்தரின் தூயவழியில்	....	117
பாடித்துதி மனமே	....	30
பாதம் ஒன்றே வேணும்	....	67

பாதம் வந்தனமே	....	68
பாதைக்குத் தீபமாமே	....	85
பாவம் போக்கும் ஜீவநதியை	....	58
பாவி என்னிடம் வரமனதில்லையா	...	55
பாவியாகவே வாறேன்	....	62
பெத்தலையில் பிறந்தவரை	....	39
போற்றும் போற்றும்	....	4
மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ	....	57
மகா அதிசயங்களை	....	2
மகிழ் மகிழ் மங்கையே	....	50
மங்களம் ஜெயமங்களம்	....	120
மரித்தாரே கிறிஸ்தேசு	...	42
மெய் ஜோதியாம	....	16
வரவேணும் பரனுவியே	....	53
வா பாவி மலைத்து நில்லாதே	....	56
வாரும் தெய்வ ஆவி வாரும்	...	9
வாருமையா போதகரே	....	106
வானம் பூமியோ பராபரன்	....	38
விசுவாசியின் காதில்பட	...	78
வினை சூழாதிந்த இரவினில்	....	104
விருந்தைச் சேருமேன்	....	18
வீராதி வீரர் ஏசு சேனை நாங்கள்	....	91
விஸ்வாசத்தோடு சாட்சி பகர்ந்தே	....	24
வேத புத்தகமே, வேத புத்தகமே	....	84

விசேட சமயங்களுக்கேற்ற பாடல்கள்.

ஞானப்பாட்டுகள்

துதி:
1, 2, 3, 4, 5

பிறப்பு, திரித்துவம்:
6, 7, 8, 9, 10.

சபை:
11, 12.

ஆராய்தல்:
13, 14.

காலை, மாலை:
15, 16.

ஞானஸ்நானம், நற்கருணை, விவாகம்:
17, 18, 19.

மோட்சம்:
20, 21, 22, 23.

பரிசுத்தவான்கள்:
24.

கீர்த்தனைகள்

தேவஸ்துதி:
25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36.

ஓய்வுநாள்:
37.

பிறப்பு:
38, 39.

பவனி:
40.

சிலுவை:
41, 42, 43, 44.

உயிர்த்தெழுதல்:
45, 46, 47, 48, 49.

பரமேறல்:
50.

பரிசுத்தாவி:
51, 52, 53, 54.

பாவம்:
55, 56, 57, 58, 59, 60

மனந்திரும்பல்:
61, 62, 63, 64, 65, 66.

ஏசுவின் பாதம்:
67, 68, 69, 70.

தற்பிரதிஷ்டை:
71, 72.

ஜெபம்:
73, 74, 75, 76, 77.

விசுவாசம்:
78, 79, 80.

அன்பு:
81, 82, 83.

வேதம்:
84, 85.

காணிக்கை:
86, 87, 88.

சுவிசேஷப் பிரபல்யம்
89, 90, 91.

முதியோர் ஞானஸ்நானம்:
92.

குழந்தை ஞானஸ்நானம்
93.

நற்கருணை:
94, 95.

புது வருஷம்:
96, 97, 98, 99, 100.

காலை, மாலை:
101, 102, 103, 104, 105, 106.

விவாகம்:
107, 108.

மரணம்:
109, 110, 111.

சிறுவர் பாட்டுகள்:
112, 113, 114, 115.

குடும்பம்:
116, 117.

மங்களம்:
118, 119, 120.

ஓய்வுநாள் காலை, ஆராதனை முறை

துதி

ஆராதனை நடத்துகிறவர் : நாம் கடவுளைத் தொழுவோமாக.

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். (யோ. 4 : 24)

தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை ; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.

அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.
(1 யோ. 1 : 5, 7)

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் ; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள். (சங். 96 : 9)

ஆண்டவரே எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக

ஆதியிலும், இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

---

* ஒரு கீதம் அல்லது கீர்த்தனை துதியாகப் பாடலாம்.

திரியேகக் கடவுளைப் போற்றுதல்

ஆ. ந: சேனைகளின் தேவனாகிய கர்த்தரே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன. உன்னதத்திலே ஓசன்னா.

ஜனம்: கர்த்தரின் நாமத்தினாலே வந்தவரும், வருகிறவருமானவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். உன்னதத்திலே ஓசன்னா.

ஆ. ந: கடவுளே, நீர் பரிசுத்தர்.

இடதுபக்கத்திலிருப்பவர்கள்: கடவுளே நீர் பரிசுத்தர்

வலதுபக்கத்திலிருப்பவர்கள்: கடவுளே நீர் பரிசுத்தர்

ஆ. ந: சர்வ வல்லவரே, நீர் பரிசுத்தர்.

இடது: சர்வ வல்லவரே, நீர் பரிசுத்தர்.

வலது: சர்வ வல்லவரே, நீர் பரிசுததர்.

ஆ. ந: சாவாமையுடையவரே, நீர் பரிசுத்தர்.

இடது: சாவாமையுடையவரே, நீர் பரிசுத்தர்.

வலது: சாவாமையுடையவரே, நீர் பரிசுத்தர்.

ஆ. ந: ஆண்டவரே, எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட எங்கள் மீட்பரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.

இடது: ஆண்டவரே, எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட எங்கள் மீட்பரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

வலது: ஆண்டவரே, எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட எங்கள் மீட்பரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

ஆ. ந: பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

இடது: பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

வலது: பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரே, எங்கள் மேல் கிருபையாயிரும்.

ஆ. ந: ஆண்டவரே எங்கள் ஜெபங்களையும், ஆராதனையையும் ஏற்றுககொண்டு, எங்கள்மேல் கிருபையாயிரும்.

எல்லாரும்: ஆண்டவரே, எங்கள்மேல் மனதுருகி, எங்கள்மேல் கிருபையாயிரும்.

பாவ அறிக்கை

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப்போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன். (பரி. லூக்கா. 15 : 18, 19)

ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந் தீர்க்கப் பிரவேசியாதேயும். (சங். 143 : 2)

நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1 : 8, 9.)

மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது. (மததேயு 3 : 2.)

அவருக்கு விரோதமாக நாங்கள் கலகம் பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு எங்களுக்கு முன்பாக் வைத்த அவருடைய நியாயப் பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற் போனோம்.

ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. (தானியேல் 9:.9, 10)

அ. ந: நாம் முழங்காற்படியிட்டு மௌனமாக நம்மை நாமே சோதித்தறிவோமாக.

எல்லாரும் முழங்காற்படியிட்டு சற்று நேரம் அமைதியாயிருப்பார்கள். பின்பு,

அ. ந: சர்வ வல்லமையுள்ள கடவுளிடத்தில் நாம் நமது பாவங்களைத் தாழ்மையோடும் அறிக்கையிடுவோமாக.

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்: உமது மிகுந்த இரக்கங்களின்படி, என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி: என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன் என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது

தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ் செய்து: உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங் கானதை நடப்பித்தேன்.

நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்: என்னைக் கழுவியருளும், அப் பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மை யாவேன்.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து: என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டி யும்: நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப் பியும்.

உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து: உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும் படி செய்யும்.

(அல்லது ii)

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே. தப்பிப்போன ஆடுகளைப் போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனை

களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்து வந்தோம்: எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள் மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும், மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை யுண்டாகும்படி, நாங்கள் இனித் தேவ பக்தியும் நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்து வர, இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

(அல்லது iii)

எங்கள் தகப்பனாகிய கடவுளே, நினைவினாலும் வார்த்தையினாலும் செய்கையினாலும் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்திருக்கிறோம். முழுமனதோடு நாங்கள் உம்மை நேசிக்கவில்லை; எங்களிடத்தில் நாங்கள் அன்புகூருவதுபோல அயலாரிடத்தில் நாங்கள் அன்புகூரவில்லை. எங்கள்மேல் இரக்கமாயிரும் என்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்; எங்கள் பாவ அழுக்கை நீக்கி எங்களைச் சுத்திகரியும்; எங்கள் குற்றங்களை விட்டுவிட எங்களுக்கு உதவி புரியும், எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம், பிதாவே. ஆமென்.

பாவ மன்னிப்பை அறிவித்தல்

ஆ. ந: சர்வ வல்லமையும், மிகுந்த இரக்கமுமுள்ள ஆண்டவர் மன்னிப்பையும் பாவ நிவிர்த்தியையும் நமக்குக் கட்டளையிட்டருளி, ஜீவியத்தைச் சீர்ப்படுத்துவதற்கான காலத்தையும், தமது பரிசுத்தாவியின் கிருபையையும் தேற்றரவையும் தந்தருளுவாராக. ஆமென்.

திருவசனப் போதனை

எல்லாரும் எழுந்து நிற்க

ஆ. ந: ஆண்டவரைத் துதியுங்கள்

ஜனம்: ஆண்டவருடைய நாமம் துதிக்கப்படுவதாக

1-ம் பக்கத்திலுள்ள திரியேகக் கடவுளின் போற்றுதல் சொல்லப்படாதிருந்தால், சங். 95:1—7, அல்லது சங்.100 இங்கே சொல்லப்படலாம் அல்லது பாடப் படலாம்.

சங்கீதம்

அந்தந்த நாளுக்குரிய சங்கீதம் அல்லது சங்கீதங்கள் சொல்ல அல்லது பாடவேண்டும்.

முதலாம் பாடம் பழைய ஏற்பாட்டிலிருந்து வாசிக்கப் படும்.

பின்வருபவைகளில் ஒன்று பாட அல்லது சொல்லப் படும். ஏதாவது ஒரு நாளில் ஆலயத்தில் ஒரே ஒரு ஆராதனை மட்டும் நடத்தப்படுமாகில், காலை, மாலை

குரு 'நமக்கு' என்பதற்குப் பதிலாக 'உங்களுக்கு' என்று சொல்லலாம்,

ஆராதனைகளில் குறிக்கப்பட்ட கீதம் முதலாம் பாடத்துக்குப்பின்னும் இரண்டாம் பாடத்துக்குப் பின்னும் உபயோகப்படுத்தலாம்.

சகரியாவின் கீதம்

(பரி. லூக்கா 1: 68-79)

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு: ஸ்தோத்திரமுண்டாவதாக.

அவர் நம்முடைய பிதாக்களுக்கு: வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்;

தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை: நினைத்தருளி,

உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு: உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ் செய்யக் கட்டளையிடுவேன் என்று,

அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு: இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்:

ஆதி முதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால்: தாம் சொன்னபடியே,

தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு: நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும் நம்மை இரட்சிக்கும்படிக்கு,

தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே: நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்.

நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்: நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணவும்,

நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும்: அவருக்கு முன்னாக நடந்து போவாய்.

அந்தகாரத்திலும் மரண இருளிலும்: உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்,

நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும்: அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

இரண்டாம் பாடம் புதிய ஏற்பாட்டிலிருந்து வாசிக்கப்படும். இரண்டு பாடங்கள் வாசித்தால் ஒன்று நிருபங்களிலிருந்தும் மற்றொன்று சுவிசேஷங்களிலிருந்தும் வாசிக்கலாம்.

திருச்சபையின் கீதம்

தேவனே, உம்மைத் துதிக்கிறோம்: உம்மைக் கர்த்தரென்று பிரஸ்தாபப்படுத்துகிறோம்.

நித்திய பிதாவாகிய உம்மை: பூமண்டலமெல்லாம் வணங்கும்.

தேவதூதர் அனைவோரும்: பரமண்டலங்களும் அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும்;

கேருபின்களும் சேராபின்களும்: தேவரீரை ஓயாமல் புகழ்ந்து போற்றி,

சேனைகளின் தேவனாகிய கர்த்தரே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்: வானமும் பூமியும் உமது மகிமையுள்ள மகத்துவத்தால் நிறைந்தன என்று முழங்குகிறார்கள்.

அப்போஸ்தலராகிய மாட்சிமை பொருந்திய கூட்டம் உம்மைப் போற்றும்: தீர்க்கதரிசிகளாகிய சிறப்புள்ள சங்கம் உம்மைப் போற்றும்.

இரத்தச் சாட்சிகளாகிய தைரிய சேனை உம்மைப் போற்றும்:

அளவில்லாத மகத்துவமுள்ள பிதாவாகிய தேவரீரையும், வணங்கப்படத்தக்க மெய்யான உம்முடைய ஒரே குமாரனையும்: தேற்றரவாளனான பரிசுத்த ஆவியையும்,

உலகமெங்குமுள்ள பரிசுத்த சபை: பிரஸ்தாபப்படுத்தும்.

கிறிஸ்துவே, தேவரீர் மகிமையின் இராஜா: நீரே பிதாவினுடைய நித்ய சுதன்.

நீர் மனிதரை இரட்சிக்க ஏற்பட்டபொழுது: கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்தை அருவருக்கவில்லை.

நீர் மரணத்தின் கொடுமையை வென்று: விசுவாசிகள் எல்லாருக்கும் மோட்ச இராஜ்யத்தைத்திறந்தீர்.

நீர் பிதாவின் மகிமையிலே; தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறீர்.

நீர் எங்களுக்கு நியாயாதிபதியாக: வருவீரென்று விசுவாசிக்கிறோம்.

உமது விலையுயர்ந்த இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உமது அடியாருக்குச் சகாயஞ்செய்ய உம்மைவேண்டிக் கொள்கிறோம்: எங்களை நித்திய மகிமையிலே உம்முடைய பரிசுத்தவான்களோடே சேர்த்துக்கொள்ளும்.

கர்த்தாவே, உமது ஜனத்தை இரட்சித்து உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்: அவர்களை ஆண்டுகொண்டு என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

தினம் தினம் உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்: எப்பொழுதும் சதாகாலங்களிலும் உமது நாமத்தை வணங்குகிறோம்.

ஆண்டவரே, இந்நாளில் பாவஞ்செய்யாதபடி எங்களைக் காத்தருளும்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும், எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறதால், உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக: கர்த்தாவே, உம்மையே நம்பியிருக்கிறேன், நான் ஒருக்காலும் கலங்காதபடி செய்யும்.

1. விளம்பரம்
2 காணிக்கை
3. பிரசங்கம்

எல்லாரும் எழுந்து நின்று அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணத்தைச் சொல்ல அல்லது பாடவேண்டும்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடு பட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சாவ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடததிலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருவார.

பரிசுதத ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்: பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவ மன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

ஆமென்.

ஜெபங்கள்

ஆ. ந: கர்த்தர் உங்களோடிருப்பாராக

மறுமொழி: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

ஜெப அழைப்பு

முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும். (மத். 6 : 33)

தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல், நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோ. 8 : 32)

நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். (மாற். 11 : 24)

உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச சொல்லுகிறேன். (மத். 18 : 19)

மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். (லூக். 11 : 9, 10)

ஆ. ந: ஜெபம்பண்ணக்கடவோம். (யாவரும் முழங்கால்படியிட்டபின்)

ஆண்டவரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.

மறுமொழி: கிறிஸ்துவே, எங்கள்மேல் கிருபையாயிரும்.

ஆ. ந: ஆண்டவரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

ஆண்டவரே, எங்கள்மேல் உமது கிருபையைக் காண்பியும்.

உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்

ஆண்டவரே, எங்களை ஆளுபவர்களை வழி நடத்தும்.

அவர்களுக்குப் பரத்திலிருந்துவரும் ஞானத்தைக் கொடுத்தருளும்.

உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்.

நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்.

ஆண்டவரே, உமது ஜனத்தை இரட்சியும்.

உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

ஆண்டவரே, எங்கள் காலத்தில் சமாதானத்தைத் தந்தருளும்.

தேவரீரேயல்லாமல் உலகத்தை ஆளுபவர் வேறு ஒருவருமில்லை.

கடவுளே, எங்களில் இருக்கும் எங்கள் இருதயங்களைச் சுத்திகரியும்.

உம்முடைய பரிசுத்த ஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாதேயும்.

ஆராதனை நடத்துகிறவர் அந்தந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்தை அல்லது சுருக்க ஜெபங்களை வாசிப்பார்.

சமாதானத்துக்காக ஜெபம்

சமாதானத்துக்குக் காரணரும் ஏகசிந்தையை விரும்புகிறவருமாகிய கடவுளே, உம்மை அறிவதே நித்திய ஜீவன், உம்மைச் சேவிப்பதே மெய்ச் சுயாதீனம். தேவரீரைத் தஞ்சமாகக்கொண்டிருக்கிற உமது அடியாராகிய நாங்கள் எந்த விரோதிகளுடைய வல்லமைக்கும் பயப்படாதிருக்கும்படியாக, எங்கள் சத்துருக்கள் செய்கிற எல்லாப் பிரயத்தனங்களிலும் நின்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் எங்களைக் காப்பாற்றியருளும். ஆமென்.

தேவ கிருபைக்காக ஜெபம்

சர்வ வல்லமையுள்ள நித்திய கடவுளே, இந்நாள் வரையும் எங்களைச் சுகமாய் நடத்திவந்த எங்கள் பரமபிதா

வாகிய ஆண்டவரே இந்நாளிலும் உமது மிகுந்த வல்லமையால் எங்களைக் காப்பாற்றி, நாங்கள் யாதொரு பாவத்துக்கு உட்படாமலும், எவ்விதமான மோசத்திலும் அகப்படாமலும், உமது பார்வைக்கு நீதியாயிருக்கிறதை எப்பொழுதும் செய்கிறதற்கு, நாங்கள் செய்கிற எல்லாவற்றையும் உம்முடைய ஆளுகையினாலே நடத்தியருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஒரு கீதம் பாடலாம்

பின்பு சந்தர்ப்பத்துக்கேற்ற ஜெபங்களும், ஸ்தோத்திரங்களும், ஆராதனை முறைமையிலிருந்தோ, சொந்த வார்த்தைகளினாலோ சொல்லவேண்டும். அவைகளில் தேசத்திற்காகவும், அதை ஆளுகிறவர்களுக்காகவும் செய்யும் ஜெபம் உட்பட்டிருக்க வேண்டும்.

ஆராதனை முடிவு

ஜெபங்களும், ஸ்தோத்திரங்களும் பின்வரும் ஜெபத்தோடு முடிவடையலாம்.

பரிசுத்த கிறிசொஸ்தம் ஜெபம்

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வ வல்லமையுள்ள கடவுளே, இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்திலே கூடி வரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச் செய்வேன் என்று வாக்கருளியிருக்கிறீரே. கர்த்தாவே உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும்

இப்பொழுது நிறைவேற்றி; இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

கீதம் அல்லது கீர்த்தனை. முன்னமே காணிக்கை எடுத் திராவிட்டால் இங்கே எடுக்கப்படலாம்.

நம்மை நேசித்து, தம்முடைய பிரிய குமாரனில் நம்மை அங்கீகரித்த பிதாவாகிய கடவுளுக்கு,

நம்மை நேசித்து; தம்முடைய சொந்த இரத்தத்தினால் நம்மை நமது பாவங்களிலிருந்து விடுவித்த குமாரனாகிய கடவுளுக்கு,

கடவுளின் அன்பை அதிகமாய் நம்முடைய இருதயங்களில் ஊற்றுகிற பரிசுத்த ஆவியாகிய கடவுளுக்கு,

ஒன்றான மெய்க் கடவுளாகிய அவருக்கே, எல்லா அன்பும் மகிமையும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்

அல்லது

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடும் கூட எப்போதைக்கும் இருப்பதாக.

அல்லது

பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமை பொருந்திய கடவுளுடைய ஆசீர்வாதம் நமக்குள்ளே இருந்து எப்பொழுதும் நம்மோடே நிலைத்திருக்கக் கடவது. ஆமென.

அல்லது

கடவுளாகிய பிதா, கடவுளாகிய குமாரன், கடவுளாகிய பரிசுத்த ஆவி இப்பொழுதும் எப்பொழுதும் நம்மை ஆசீர்வதித்து, காப்பாற்றி, பாதுகாப்பாராக. ஆமென்.

அல்லது

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து நம்மைக் காக்கக்கடவர். ஆண்டவர் தம்முடைய முகத்தை நம்மேல் பிரகாசிக்கப்பண்ணி நம்மேல் கிருபையாயிருக்கக்கடவர். ஆண்டவர் தம்முடைய முகத்தை நம்மேல் பிரசன்னமாக்கி, இப்பொழுதும் எப்பொழுதும் நமக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். ஆமென்.

குரு "நம்மேல்" என்பதற்குப் பதிலாக "உங்கள் மேல் என்று சொல்லலாம்.

(முடிவுப் பவனிக் கீதம்)

வணக்க ஆராதனை

போற்றுதல்:—துதியின் கீதம்.

ஆராதனைக்கு அழைப்பு

(ஆராதனை நடத்துபவரும் சபையாரும் மாறி மாறி வாசிக்க வேண்டிய வாக்கியங்கள்)

கர்த்தரின் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும்; அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம், வாருங்கள்.

அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து; தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.

அவருக்கு விரோதமாக நாம் கலகம் பண்ணி அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு நமக்கு முன்பாக வைத்த அவருடைய நியாயப் பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாம் அவருடைய வசனத்துக்குச் செவிகொடாமற் போனோம். ஆகிலும் நமது தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய் தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவம் செய்தேன் என்பேன்.

(யாவரும்)

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாய் இருப்பதாக, ஆமென.

(அல்லது (ii))

கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது.

மகிமையும், கனமும் அவர் சமூகத்தில் இருக்கிறது; வல்லமையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்திலுள்ளன.

நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசிப்பேன்.

உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பக்தியுடன் பணிந்து கொள்வேன்.

கர்த்தர் என் வெளிச்சமும், என் இரட்சிப்புமானவர் யாருக்கு பயப்படுவேன் ?

கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன் ?

அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.

பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது.

கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்.

(யாவரும்)

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே என் வாயின் வார்த்தைகளும் என இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. ஆமென்.

(அல்லது (iii))

ஆராதனை நடத்துகிறவர் வேதாகமத்திலிருந்து ஏற்ற வசனங்களை வாசிக்கவேண்டும் (உதாரணமாக பக்கம் 25 அநுபந்தம் பார்க்க)

கடவுளின் பிரசன்னத்துக்காக வேண்டிக் கொள்ளுதல்.

பிரார்த்தனை செய்வோமாக

சர்வ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உமது சமுகத்

தில் எங்கள் வணக்கத்தையும் தோத்திரத்தையும் செலுத்த வந்திருக்கிறோம். எங்கள் பாவங்களை உண்மையாய் அறிக்கை செய்யவும், மற்றவர்களுக்காகவும் எங்களுக்காகவும் ஜெபிக்கவும் உதவிசெய்தருளும். உமது பரிசுத்த வசனத்தை நாங்கள் கேட்கும்போது உமது அன்பின் மகத்துவத்தை அதிக உண்மையாய் அறிந்து கொள்ளவும் உமது கிருபையின் கனிகளை எங்கள் வாழ்க்கையில் காட்டவும் அருள்புரியவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

(அல்லது ii)

ஆண்டவரே, உமது பரிசுத்த நாமத்தைத் துதிக்கும்படி எங்கள் உதடுகளைத் திறந்தவரே, வீணானதும் பாவமுள்ளதும் அங்குமிங்கும் அலைகிறதுமான எல்லாவித எண்ணங்களையும் நீக்கி எங்கள் இருதயங்களைச் சுத்திகரித்தருளும். உமது பரிசுத்த வசனத்தை நாங்கள் கேட்குப்போது, அவற்றை அறிந்துகொள்ளும் ஆவியை அனுக்கிரகித்தருளும். உம்மிடத்திலும், எங்களோடு தொழுதுகொள்ளுகிறவர்களிடத்திலும் பேரன்புகொள்ள எங்கள் இருதயங்களில் அனல்மூட்டியருளும். உமது குமாரனின் நாமத்தினால் அழைக்கப்படுவதற்கு அபாத்திரராய்ப் போகாமல், உமக்கு மிகவும் உகந்தவர்களாய்க் காணப்பட எங்களுக்கு உதவிசெய்தருளவேண்டுமென்று, உம்முடைய இரக்கங்கள் புண்ணியங்களின் மூலமாய் அவருடைய அன்பினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

(அல்லது iii)

சர்வ வல்லமையுள்ள கடவுளே, நன்மையான ஒவ்வொரு ஜெபமும் உம்மிடத்திலிருந்து வருகின்றது. நீரே விரும்புகிற யாவர்மேலும் கிருபையின் ஆவியையும் வேண்டுதலின் ஆவியையும் பொழிந்தருளுகின்றீர். நாங்கள் உம்மைக் கிட்டிச் சேரும்போது, எங்கள் இருதயம் அனலற்றுப் போகாதபடியும், எங்கள் சிந்தை சிதறாதபடியும் எங்களைக் காத்தருளும். நாங்கள் உறுதியான சிந்தையிலும், அன்பின் அளவிலும், ஆவியிலும் உண்மையிலும் உம்மைத் தொழுதுகொள்ள அருள்புரியவேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஒரு கீதம் அல்லது கீர்த்தனை பாடலாம்.

ஒரு சங்கீதம் மாறி மாறி வாசிக்கலாம் அதன் இறுதியில் திரியேகக் கடவுளின் துதி பாடவேண்டும். (பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் &c.)

பாவ அறிக்கை

ஆராதனை நடத்துகிறவர் ஒரு வேத வசனத்தினால் ஜனங்களை மனந்திரும்புதலுக்கு அழைக்கவேண்டும், (2ம் 3ம் பக்கங்கள் பார்க்க). எல்லாரும் முழங்கால் படியிட்டிருக்க பொதுவான பாவ அறிக்கை சபையாரால் சொல்லப்படும்.

ஜெபம் பண்ணக்கடவோம்

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய

வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிக வும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனை களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்துவந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச்செய்த வாக் குத்தத்தங்களின்படியே நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளி களாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கை யிடுகிற எங்கள் மேல பொறுமையாயிரும். பாவத்தினிமித் தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை உண்டாகும்படி, நாங்கள் இனித் தேவ பக்தியும் நீதியும் தெளிந்த புத்தியுமுள்ளவர்களாய் நடந்துவர, இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்குக் கிருபை செய் தருளும். ஆமென்.

(அல்லது (ii))

தகுந்த ஓர் கீதம் அல்லது கீர்த்தனை முழங்காலில் நின்று பாடலாம்.

பாவ மன்னிப்புக்காக ஜெபம்

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள ஆண்டவர், நமக்கு மன்னிப்பையும் பாவ நிவிர்த்தியையும் கட்டளை யிட்டருளி, நமது ஜீவியத்தைச் சீர்ப்படுத்துவதற்கான காலத்தையும், தமது பரிசுத்த ஆவியின் கிருபையையும் தேற்றரவையும் தந்தருளுவாராக. ஆமென்.

(அல்லது கர்த்தருடைய இராப் போஜன ஆராதனை முறையிலுள்ள பாவ மன்னிப்பை அறிவிக்கலாம்)

ஸ்தோத்திர ஜெபம்

சர்வ வல்லமையுள்ள கடவுளே, சர்வ ஜீவதயாபர பிதாவே, அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும், தேவரீர் அருளிச்செய்த பற்பல கிருபைக்காகவும், அன்புள்ள தயவுக்காகவும், நாங்கள் மிகுந்த தாழ்மையோடும் முழு இருதயத்தோடும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைச் சிருஷ்டித்ததற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும், உம்மைத் துதிக்கிறோம். விசேஷமாய், எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலே உலகத்தை மீட்டுக்கொண்ட விலைமதியாத உமது அன்புக்காகவும் கிருபையின் யத்தனங்களுக்காகவும், மகிமையடைவோம் என்கிற நம்பிக்கைக்காகவும், உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் உண்மையாய் நன்றியறிந்த இருதயமுள்ளவர்களாயிருக்கவும், எங்களை உமது ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து, எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கு முன்பாகப் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய் நடக்கவும், எங்கள் வாக்கினாலே மாத்திரமல்ல, எங்கள் நடக்கையினாலேயும் உம்முடைய புகழைப் பிரஸ்தாபப்படுத்தவும், தேவரீர் செய்த உபகாரங்களெல்லாவற்றையும் உணர்ந்துகொள்ளும் உணர்வை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும் எல்லா மேன்மையும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

(அல்லது ii)

ஒரு ஸ்தோத்திரக் கீதம் அல்லது கீர்த்தனை பாடலாம். கீதம் அல்லது கீர்த்தனை, பொதுவான ஸ்தோத்திரத்திற்குப் பதிலாக ஸ்தோத்திரக் கீதமோ கீர்த்தனையோ ஸ்தோத்திர ஜெபமாகப் பாடப்படுமானால் வேறு கீதம் அல்லது கீர்த்தனை அவசியமில்லை.

பாடங்கள். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடங்கியுள்ள பாடங்களை வாசிக்கலாம்.

திருச்சபைக் கீதம். காலை மாலை ஆராதனை ஜெபத்திலுள்ளது (பக். 10), சகரியாவின் கீதம் (பக். 7), கன்னி மரியாளின் கீதம் (பக். 7), அல்லது சிமியோனின் கீதம் (பக். 10) முதலியன பாடங்களின் இடையில் பாடலாம்.

விசுவாசப் பிரமாணம். காலை மாலை ஜெபத்திலுள்ளது (பக். 12).

மன்றாட்டு ஜெபம்.

அடியில் காட்டியவைகளுக்காக ஆராதனை நடத்துபவர் ஜெபிப்பார்.

அதிகாரம் வகிப்பவர், அரசாங்கம், அகிலலோகத் திருச்சபை, தென் இந்திய திருச்சபை, அத்தியக்ஷர்கள், குருக்கள், சபையார், பற்பல நிலைமையிலுள்ள மனிதர், வியாதியஸ்தர், துன்பப்படுகிறவர்கள்.

ஆராதனை நடத்துபவர் பின்பு சொல்வது:

பரி. கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்—காலை மாலை ஜெபம். (பக். 15).

கர்த்தருடைய ஜெபம்: (பக். 13).

சிறுவருக்கான ஆராதனை.

ஒரு கீதமோ, கீர்த்தனையோ சிறுவர் பாடலாம். அவர்களுக்காகப் பிரசங்கமும் ஜெபமும் செய்யப்பட வேண்டும்.

விளம்பரங்கள்.

காணிக்கை.

கீதம் அல்லது கீர்த்தனை பாடலாம்.

காணிக்கை ஜெபம்:

எல்லா நன்மையான ஈவுகளையும் அருளுகிற கடவுளே, இந்த உமது ஜனங்களின் காணிக்கையைக் கிருபையாக ஏற்றுக்கொள்ளும். இவர்களையும் இந்தக் காணிக்கையையும் ஆசீர்வதித்து இதன் மூலமாய் சமாதானமும், நல்லெண்ணமும் உலகமெங்கும் அதிகரிக்கும்படி கிருபை செய்ய வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

ஆமென்

அல்லது வேறு தகுந்த பிரார்த்தனை செய்யலாம்.

பிரசங்கம்.

மௌன ஜெபம்.

பிரதிஷ்டைப் பிரார்த்தனே : எங்கள் பிதாவாகிய கடவுளே, எங்களுக்காகப் பிட்கப்பட்ட ஜீவ அப்பத்துக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது வார்த்தைக்கு நாங்கள் செவிகொடுக்கவும் எங்கள் வாழ்நாளெல்லாம் அதற்கு உண்மையாய்க் கீழ்ப்படியவும் எங்களுக்கு கிருபைசெய்யும். எங்கள் அன்பிலும் பரிசுத்த வாழ்க்கையிலும்உமது புகழைப் பிரஸ்தாபப்படுத்தவும் எங்களுக்கு அருள் செய்யும். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

ஆசீர்வாதம்

முடிவுக் கீதம்

ஒரு கீதம்

வேதபாடம் பழைய ஏற்பாடு

கீதம் பாடலாம்.

வேத பாடம். புதிய ஏற்பாடு (ஒன்று அல்லது இரண்டு பாகங்கள். இரண்டானல் ஒன்று சுவிசேஷங்களிலிருந்து எடுக்கப்படவேண்டும்.)

(குறிப்பு: பாடம் வாசிப்பவர் வாசிக்குமுன் சொல்வது: ... . ஆகமம்..... அதிகாரம்......வசன முதல் அடங்கிய கடவுளுடைய வசனத்தைக் கேளுங்கள்.

வாசித்தபின் அவர் சொல்வது : ஆண்டவர் தமது பரிசுத்த வார்த்தையிலிருந்து வாசித்ததை நமக்கு ஆசீர்வதிப்பாராக. அவருடைய நாமத்துக்கே புகழும் மகிமையும் உண்டாவதாக.

பழைய ஏற்பாட்டுப் பாடத்துக்குப்பின் ஒரு கீதம் பாடலாம்.)

பிரசங்கம். பிரசங்கத்துக்கு முன் அருட்பிரசங்கத்துக்காக ஒரு ஜெபம் அல்லது திரியேகக் கடவுளைத் துதித்தல், பிரசங்கத்துக்குப்பின் துதி, ஸ்தோத்திரம் கூறலாம்

அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம். யாவரும் எழுந்து நிற்க, சொல்ல அல்லது பாடலாம்.

அறிவிப்புகள்.

ஜெபம், துதி, மன்றாட்டு, மறுமைக்குட்பட்ட விசுவாசிகளுக்காக ஸ்தோத்திரம்.

கர்த்தருடைய ஜெபம்.

கீதம்.

பிரசங்கம் முன் செய்யப்படாவிட்டால் இவ்விடத்தில் செய்யப்படலாம்,

காணிக்கைப் பிரதிஷ்டை.

கீதம்.

ஆசீர்வாதம்.

ஞானப்பாட்டுகள்

1. (2) "Laudamus te"

1. உம்மைத் துதிக்கிறோம், யாவுக்கும் வல்ல பிதாவே;
உம்மைப் பணிகிறோம், ஸ்வாமி, ராஜாதி ராஜாவே:
உமது மா
மகிமைக்காக, கர்த்தா, ஸ்தோத்திரம் சொல்லு
கிறோமே.

2. கிறிஸ்துவே, இரங்கும்; சுதனே, கடன் செலுத்தி,
லோகத்தின் பாவத்தை நீக்கிடும் தெய்வாட்டுக்குட்டி,
எங்கள் மனு
கேளும்; பிதாவினது ஆசனத் தோழா, இரங்கும்.

3. நித்திய பிதாவின் மகிமையில், இயேசுவே, நீரே.
பரிசுத்தாவியோடேகமாய் ஆளுகிறீரே.
ஏகமாய் நீர்
அர்ச்சிக்கப்படுகிறீர். உன்னத கர்த்தரே. ஆமென்.

---

2. (11) "Sei Lob und Ehr dem hochsten Gut"

1. மகா அதிசயங்களை செய்தென்னைப் பூரிப்பித்து,
உபத்திரவத்தின் பாரத்தை இரக்கமாய்க் கழித்து,
ரட்சிக்கிற தயாபரர் இஸ்தோத்திரிக்கப்பட்டவர்;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.

2. கர்த்தாதி கர்த்தா, தேவரீர் யாவற்றையும் நன்றாக
சிஷ்டித்துத் திட்டம்பண்ணினீர் என்றும்மைப்
பணிவாக
விண்மண் கடல் ஆகாசத்து சேனை திரள்கள்
போற்றுது;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி

3. ஆ கேளும் என் தன் துன்பத்தில் கர்த்தாவைக்
கெஞ்சி வந்தேன்,
அப்போது ஏற்றவேளையில் மகா ரட்சிப்பைக்
கண்டேன்;
இதற்கென் நாவே, கீதம் சொல், என்னோடெல்லா
ரும் பாடுங்கள்;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.

4. நான் தேவரீரை என்றைக்கும் மகிழ்ச்சியாய்த்
துதிப்பேன்;
நான் உம்மை நித்த நித்தமும் புகழ்ந்து ஸ்தோத்
திரிப்பேன்.
என் ஆத்மமும் தேகமும், கர்த்தாவே, உம்மைப்
போற்றவும்;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.

5. மெய் மார்க்கத்தாரே, கர்த்தரைத் துதித்துக் கொண்
டிருங்கள்,
அவருடைய நாமத்தை எந்நேரமும் தொழுங்கள்,
பொய்த் தேவர் செவிடுமையர், கர்த்தா கர்த்தாவே
ஆண்டவர்;
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.

6. நாம் தெய்வ சன்னிதியிலே மகா மகிழ்ச்சியாக
வந்துன்னத கர்த்தாவையே வணக்கம் செய்வோ
மாக.
பராபரனைப்போல யார், யாவற்றையும் நன்றாக்
கினார்?
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி.

---

3. (15) "Thut mir auf die schone Pforte"

1. அலங்கார வாசலாலே கோவிலுக்குள் போகிறேன்;
தெய்வ வீட்டின் நன்மையாலே ஆத்துமத்தில்
பூரிப்பேன்;
இங்கே தெய்வ சமுகம், மெய் வெளிச்சம், பாக்கியம்

2. கர்த்தரே, உம்மண்டை வந்த என்னண்டைக்கு வாருமேன்;
நீர் இறங்கும்போதனந்த இன்பத்தால் மகிழுவேன்
என்னுட இதயமும் தெய்வ ஸ்தலமாகவும்.

3. பயத்தில் உம்மண்டை சேர, என் ஜெபம் புகழ்ச்சியும்
நல்ல பலியாக ஏற உமதாவியைக் கொடும்;
தேகம், ஆவி யாவையும் சுத்தமாக்கியருளும்.

4. நல்ல நிலத்தில் விழுந்த விதை பயிராகுமே;
நானும் அவ்வாறே மிகுந்த கனிகளைத் தரவே
வசனத்தைக் காக்க நீர் ஈவளிக்கக் கடவீர்.

5. விசுவாசத்தை விடாமல் அதில் பலப்படவும்,
ஒருகாலும் தவறாமல் உம்மை நான் பின்செல்லவும்,
மெய்வெளிச்சத்தை நீரே என்னில் வீசும் கர்த்தரே.

6. சொல்லும், கர்த்தரே; நான் கேட்பேன் நீர் இப்பாழ் நிலத்திலே
பெய்யப்பண்ணும் மன்னா சேர்ப்பேன் நல் தியானத் துடனே;
தாரும் ஜீவபானத்தை, தீரும் பசிதாகத்தை.

---

4. (267) "Praise Him, Praise Him."

1. போற்றும் போற்றும்,! புண்ணியநாதரைப் போற்றும்!
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்,
பாரிலேயும் நாம சங்கீர்த்தனம் செய்ய!
மாந்தர் யாரும் வாரும் ஆனந்தமாய்
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
இயேசுநாதர் நம்மையும் தாங்குவார்;.
போற்றும், போற்றும்! தெய்வகுமாரனைப் போற்றும்!
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்.

2. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப்
போற்றும்!
பாவம்போக்கப் பாரினில் ஜென்மித்தார்;
பாடுபட்டுப் ப்ராணத் தியாகமும் செய்து
வானலோக வாசலைத் திறந்தார்.
மா கர்த்தாவே, ஸ்தோத்திரம் என்றும் என்றும்!
வாழ்க, வாழ்க, ஜெகத்து ரட்சகா!
அருள் நாதா, மாசணுகா பரஞ்சோதி!
வல்ல நாதா, கருணை நாயகா!

3. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப்
போற்றும்!
விண்ணும் மண்ணும் இசைந்துபாடவும்;
போற்றும், போற்றும் மீட்பர் மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்;
ஏகராஜா, மாட்சிமையோடு வந்து,
இயேசு ஸ்வாமீ, பூமியில் ஆளுமேன்;
லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்.

---

5. (261) "All hail the power of Jesus' Name."

1. எல்லாருக்கும் மா உன்னதர் கர்த்தாதி கர்த்தரே,
மெய்யான தேவ மனிதர், நீர்வாழ்க, இயேசுவே!

2. விண்ணில் ப்ரதானியான நீர் பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்; நீர் வாழ்க, இயேசுவே!

3. பிசாசு, பாவம், உலகை, உம் சாவால் மிதித்தே,
ஜெயித்தடைந்தீர் வெற்றியை; நீர் வாழ்க, இயேசுவே

4. நீர் வென்றபடி நாங்களும் வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்; நீர் வாழ்க,
இயேசுவே!

5. விண்ணோர்களோடு மண்ணுள்ளோர் என்றைக்கும்
வாழவே,
பரம வாசல் திறந்தோர் நீர் வாழ்க, இயேசுவே!

6. (61) O Come all ye faithful.

1 பக்தரே, வாரும் ஆசை ஆவலோடும் ;
நீர் பாரும், நீர் பாரும் இப்பாலனை :
வானோரின் ராஜன் கிறிஸ்து பிறந்தாரே'

சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும் யேசுவை.

2 தேவாதி தேவா, ஜோதியில் ஜோதி,
மானிடத் தன்மை நீர் வெறுத்திலீர்
தெய்வ குமாரன், ஒப்பில்லாத மைந்தன் !

3 மேலோகத்தாரே, மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடிப் போற்றுமேன் ;
'விண்ணில் கர்த்தா நீர், மா மகிமை ஏற்பீர் !'

4 இயேசுவே, வாழ்க ! இன்று ஜென்மித்தீரே,
புகழும் ஸ்தோத்திரமும் உண்டாகவும் :
தந்தையின் வார்த்தை மாம்சம் ஆனார் பாரும்.

7. (103) "When I survey the wondrous cross"

Rockingham

1 என் அருள் நாதா, இயேசுவே !
சிலுவைக் காட்சி பார்க்கையில்,
பூலோக மேன்மை நஷ்டமே.
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்.

2 என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன் ?
சிற்றின்பம் யாவும் அதனால்
தகாததென்று தள்ளுவேன்

3 கை, தலை, காலிலும் இதோ!
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ?
முள்முடியும் ஒப்பற்றதே.

4 சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்!
என் ஜீவன் சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்.

5 மாந்தர்க்கு மீட்பைக் கஸ்தியால்
சம்பாதித் தீந்த ஏசுவே,
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே!

---

8. (126) Jesus Christ is risen to-day

1 இன்று கிறிஸ்து எழுந்தார், அல்லேலூயா!
இன்று வெற்றிசிறந்தார்; அல்லேலூயா!
சிலுவை சுமந்தவர், அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தவர் அல்லேலூயா!

2 ஸ்தோத்திரப் பாட்டுப் பாடுவோம், அல்லேலூயா!
விண்ணின் வேந்தைப் போற்றுவோம், அல்லேலூயா!
அவர் தாழ்ந்துயர்ந்தாரே: அல்லேலூயா!
மாந்தர் மீட்பர் ஆனாரே, அல்லேலூயா!

3 பாடனுபவித்தவர், அல்லேலூயா!
ரட்சிப்புக்குக் காரணர்; அல்லேலூயா!
வானில் இப்போதாள்கிறார்; அல்லேலூயா!
தூதர் பாட்டைக் கேட்கிறார். அல்லேலூயா!

---

9. (278) "Komm, o komm, du Geist des Lebens."

1. வாரும், தெய்வ ஆவி, வாரும், எங்கள் ஆத்துமத்திலே,
எங்களுக்குயிரைத் தாரும், வாரும், சுத்த ஆவியே!
உம்முடன் வெளிச்சமும் சீரும் ஜீவனும் வரும்

2. எங்கள் நெஞ்சிலே நற் புத்தி, தெய்வ பயமும் வர
அதை நீர் குணப்படுத்தி, தப்பு நினைவாகிய
யாவையும் அதில் நீரே நீக்கும் தெய்வ ஆவியே

3. மோட்சத்தின் வழியைக் காட்டி, சகல தடையையும்
நீக்கி, எங்களைக் காப்பாற்றி நல்லோராக்கியருளும்;
கால் இடறிற்றேயாகில், துக்கம் தாரும் மனதில்

4. மனசெங்களில் கலங்கி: "ஸ்வாமி, எந்தமட்டுக்கும்"
என்று கெஞ்சும் போதிரங்கி அதை ஆற்றிக்
கொண்டிரும்,
நிற்கவும் தரிக்கவும் நீர் சகாயராய் இரும்.

---

10. (22) Holy Holy Holy Lord God Almighty

1. தூய, தூய, தூயா! சர்வவல்ல நாதா!
தேவரீர்க் கென்நாளும் சங்கீதம் ஏறுமே;
தூய, தூய, தூயா! மூவரான ஏகா!
காருணியரே, தூய திரியேகரே!

2. தூய, தூய, தூயா! அன்பர் சூழ நின்று
தெய்வ ஆசனமுன்னர் தம் கிரீடம் வைப்பாரே,
கேருபிம் சேராபிம் தாழ்ந்து போற்றப்பெற்று,
இன்றென்றும் வீற்றுருள்வீர், அநாதியே!

3 தூயா, தூய, தூயா! ஜோதி பிரகாசா,
பாவக் கண்ணால் உன் தன் மாண்பைக் காண யார்
வல்லோர்?
நீரே தூய தூயர், மனோவாக்குக்கெட்டா
மாட்சிமை, தூய்மை, அன்பும் நிறைந்தோர்.

4. தூய, தூய, தூயா! சர்வவல்ல நாதா!
வானம் பூமி ஆழி உம்மை ஸ்தோத்திரிக்குமே,
தூய, தூய, தூயா! மூவாரன ஏகா!
காருணியரே, தூய திரியேகரே!

---

11. (172) The Church's one foundation.

1. சபையின் அஸ்திபாரம் நல் மீட்பர் கிறிஸ்துவே;
சபையின் ஜன்மாதாரம் அவரின் வார்த்தையே;
தம் மணவாட்டியாக வந்ததைத் தேடினார்,
தமக்குச் சொந்தமாக மரித்ததைக் கொண்டார்.

2. எத்தேசத்தார் சேர்ந்தாலும்; சபை ஒன்றே ஒன்றாம்;
ஒரே விஸ்வாசத்தாலும் ஒரே ரட்சிப்புண்டாம்;
ஒரே தெய்வீக நாமம் சபையை இணைக்கும்;
ஓர் திவ்விய ஞானகாரம் பக்தரைப் போஷிக்கும்.

3. புறத்தியார் விரோதம் பயத்தை உறுத்தும்;
உள்ளானவரின் துரோகம் கிலேசப்படுத்தும்;
பக்தர் ஓயாத சத்தம், "'எம்மட்டும்'?" என்பதாம்;
ராவில் நிலைத்த துக்கம் காலையில் களிப்பாம்.

4 மேலான வான காட்சி கண்டாசீர்வாதத்தை
பெற்று, போர் ஓய்ந்து வெற்றி சிறந்து, மாட்சிமை
அடையும் பரியந்தம் இன்று உழைப்பிலும்,
நீங்காத சமாதானம் மெய்ச் சபை வாஞ்சிக்கும்.

---

5 ஆராயும் மறைவிடத்தை உம் தூய கண்ணினால்:
அரோசிப்பேன் என் பாவத்தை உம்பேரருளினால்.

6 இவ்வாறு நீர் ஆராய்கையில், சாஷ்டாங்கம் பண்ணுவேன்;
உம் சரணார விந்தத்தில் பணிந்து போற்றுவேன்.

---

15. (36) Abide with me fast falls the eventide

1 என்னோடிரும். மாநேச கர்த்தரே,
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே,
மற்றோர் சகாயம் அற்றபோதிலும்,
நீங்கா ஒத்தாசை நீர், என்னோடிரும்.

2 நீர்மேல் குமிழிபோல் என் ஆயுசும்,
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்:
கண் கண்ட யாவும் மாறி வாடிடும்,
மாறாத கர்த்தர் நீர், என்னோடிரும்.

3 நியாயம் தீர்ப்போராக என்னண்டை
வராமல், சாந்தம் தயை கிருபை
நிறைந்த மீட்பராகச் சேர்ந்திடும்,
நீர் பாவி நேசரே, என்னோடிரும்.

4 நீர் கூடநின்று அருள்புரியும்:
பிசாசின் கண்ணிக்கு நான் தப்பவும்
என் துணை நீர், என தஞ்சமாயிரும்
இக்கட்டில் எல்லாம் நீர் என்னோடிரும்.

5 நீர் ஆசீர்வதித்தால் கண்ணீர் விடேன்;
நீரே என்னோடிருந்தால் அஞ்சிடேன்:
சாவே எங்கே உன் கூரும் ஜெயமும்?
நான் உம்மால் வெல்ல நீர் என்னோடிரும்

6 நான் சாகும் அந்தகார நேரத்தில்
உம் சிலுவையைக் காட்டும்; சாகையில்.
விண் ஜோதி வீசி, மருள் நீக்கிடும்:
வாழ்நாள் சாங்காலிலும் என்னோடிரும்

---

16. (40) "Sun of my soul Thou Saviour dear"

1 மெய் ஜோதியாம் நல் மீட்பரே,
நீர் தங்கினால் ராவில்லையே ;
என் நெஞ்சுக்கும்மை மறைக்கும்
மேகம் வராமல் காத்திடும்

2 என்றைக்கும் மீட்பர் மார்பிலே
நான் சாய்வது பேரின்பமே
என்றுவலாய் ராவிலும்.
சிந்தித்துத் தூங்க அருளும்.

3 என்னோடு தங்கும் பகலில்.
சுகியேன் நீர் இராவிடில் ;
என்னோடே தங்கும் ராவிலும்
உம்மாலே அஞ்சேன் சாவிலும்.

4 இன்றைக்குத் திவ்ய அழைப்பை
அசட்டை செய்த பாவியை
தள்ளாமல், வல்ல மீட்பரே,
உம்மண்டை சேர்த்துக் கொள்ளுமே.

5 வியாதியஸ்தர், வறியோர்,
ஆதரவற்ற சிறியோர்,
புலம்புவோர் எல்லாரையும்
அன்பாய் விசாரித்தருளும்.

6 பேரன்பின் சாகரத்திலும்
நான் மூழ்கி வாழுமளவும்,
என் ஆயுள்காலம் முழுதும்
உம் அருள் தந்து காத்திடும்.

---

17 (179)

1. தம்மண்டை வந்த பாலரை ஆசீர்வதித்த ரட்சகர்
இப்போதும் சிறுவர்களை அணைக்கத் தயையுள்ளவர்.

2. குழந்தைகளுக்காகவும் மரித்துயிர்த்த ஆண்டவர்
சிறந்த நன்மை வரமும் தரக் காருண்யமுள்ளவர்.

3. ஆ இயேசுவே, இப்பிள்ளையை அணைத்து ஏந்தி
யருளும்;
அளவில் லாசீர்வாதத்தை அன்பாகத் தந்திரட்சியும்.

---

18. (198) "Come for the feast is spread"

1 விருந்தைச் சேருமேன், அழைக்கிறார்;
ஆகாரம் பாருமேன், போஷிப்பிப்பார்;
தாகத்தைத் தீர்க்கவும் இயேசுவின் மார்பிலும்
சாய்ந் திளைப்பாறவும் வா, பாவி, வா.

2 ஊற்றண்டை சேரவும், ஜீவனுண்டாம்;
பாடும் விசாரமும் நீங்கும் எல்லாம்;
நம்பி வந்தோருக்குத் திருப்தி உண்டாயிற்று;
ஜீவாற்றின் அண்டைக்கு வா, பாவி, வா.

3 மீட்பரின் பாதமும் சேராவிடில்,
தோல்வியே நேரிடும் போராட்டத்தில்;
இயேசுவே வல்லவர், இயேசுவே நல்லவர்,
இயேசுவே ஆண்டவர்; வா, பாவி, வா.

4 மோட்சத்தின் பாதையில் முன்செல்லுவாய்;
சிற்றின்ப வாழ்வினில் ஏன் உழல்வாய்?
வாடாத கிரீடமும் ஆனந்தக் களிப்பும்
பேர் வாழ்வும் பெறவும் வா, பாவி, வா,

5 சேருவேன், இயேசுவே, ஏற்றுக்கொள்வீர்;
பாவமும் அறவே சுத்தம்செய்வீர்;
அப்பாலே மோட்சத்தில் ஆனந்தக் கடலில்
மூழ்கிப் பேரின்பத்தில் கெம்பீரிப்பேன்.

---

19. (216) "The Voice that breathed o'er Eden."

1 ஏதேனில் ஆதி மணம் உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம் மாறாதிருக்குமே.

2 இப்போதும் பக்தி யுள்ளோர் விவாகம் தூய்மையாம்;
மூவர் பிரசன்னமானவர், மும்முறை
வாழ்த்துண்டாம்.

3 ஆதாமுக்கு ஏவாளைக் கொடுத்த பிதாவே,
இம்மாப்பிள்ளைக்கும் பெண்ணை கொடுக்க வாருமே.

4 இரு தன்மையும் சேர்ந்த கன்னியின் மைந்தனே,
இவர்கள் இரு கையும் இணைக்கவாருமே.

5 மெய் மணவாளனான தெய்வ குமாரர்க்கே
சபையாம் மணையாளை ஜோடிக்கும் ஆவியே,

6 நீரும் இந்நேரம் வந்து இவ்விருபேரையும்
இணைத்து அன்பாய் வாழ்த்தி, மெய்ப் பாக்கியம்
ஈந்திடும்.

7 கிறிஸ்துவின் பாரியோடே எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றும் காத்து, பேர் வாழ்வு ஈந்திடும்.

---

20. (400) 'Jerusalem my happy home.'

1 எருசலேம் என் ஆலயம், ஆசித்த வீடதே;
நான் அதைக் கண்டு பாக்கியம் அடையவேண்டுமே.

2 பொற்றளம் போட்ட வீதியில் எப்போதுலாவுவேன்?
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில் எப்போது
பணிவேன்?

3 எந்நாளும் கூட்டம் கூட்டமாய் நிற்கும் அம்மோட்சத்தார்.
கர்த்தாவைப்போற்றிக் களிப்பாய் ஓய்வின்றிப் பாடுவார்.

4 நானும் அங்குள்ள கூட்டத்தில் சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்துலோக துன்பத்தில் களிப்பேன் இயேசுவே.

5 எருசலேம் என் ஆலயம், நான் உன்னில் வாழுவேன்.
என் ஆவல், என் அடைக்கலம், எப்போது சேருவேன்?

---

21. (336) "Nearer, my God to Thee"

1 உம்மண்டை, கர்த்தரே, நான் சேரட்டும்:
சிலுவை சுமந்து நடப்பினும்,
என் ஆவல் என்றுமே உம்மண்டை, கர்த்தரே,
நான் சேர்வதே.

2 தாசன் யாக்கோபைப்போல், ராக் காலத்தில்
திக்கற்றுக் கல்லின்மேல் தூங்குகையில்,
என்தன் கனவிலே உம்மண்டை, கர்த்தரே,
இருப்பேனே.

3 நீர் என்னை நடத்தும் பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிபோல் விளங்குமாம்;
தூதர் அழைப்பாரே உம்மண்டை, கர்த்தரே,
நான் சேரவே.

4 விழித்து உம்மையே நான் துதிப்பேன்;
என் துயர்க் கல்லை உம் வீடாக்குவேன்;
என் துன்பத்தாலுமே உம்மண்டை, கர்த்தரே,
நான் சேர்வேனே.

---

22. (253) "O God our help in ages past".

1 கர்த்தாவே, யுகயுகமாய் எம் துணை ஆயினீர்;
நீர் இன்னும் வரும் காலமாய் எம் நம்பிக்கை ஆவீர்.

2 உம் ஆசனத்தின் நிழலே பக்தர் அடைக்கலம்;
உம் வன்மையுள்ள புயமே நிச்சய கேடகம்.

3 பூலோகம் உருவாகியே, மலைகள் தோன்றுமுன்,
சுயம்புவாய் என்றும் நீரே மாறா பராபரன்

4 ஆயிரம் ஆண்டு உமக்கு ஓர் நாளைப்போலாமே;
யுகங்கள் தேவரீருக்கு ஓர் இமைக்கொப்பாமே

5 சாவுக்குள்ளான மானிடர் நிலைக்கவேமாட்டார்;
உலர்ந்த பூவைப்போல் அவர் உதிர்ந்து போகிறார்.

6 கர்த்தாவே, யுகயுகமாய் எம் துணை ஆயினீர்;
இக்கட்டில் நற்சகாயராய் எம் நித்திய வீடாவீர்.

---

23. (323) "Lead Kindly Light".

1 காரிருளில், என் நேச தீபமே, நடத்துமேன்;
வேறொளியில்லை, வீடும் தூரமே, நடத்துமேன்;
நீர் தாங்கின், தூரக் காட்சி ஆசியேன்.
ஓர் அடிமட்டும் என்முன் காட்டுமேன்.

2 என் இஷ்டப்படி நடந்தேன், ஐயோ முன்னாளிலே;
ஒத்தாசை தேடவில்லை, இப்போதோ நடத்துமே;
உல்லாசம் நாடினேன், திகிலிலும்
வீம்புகொண்டேன், அன்பாக மன்னியும்.

3 இம்மட்டும் என்னை ஆசிர்வதித்தீர்; இனிமேலும்
காடாறு சேறு குன்றில் தேவரீர் நடத்திடும்;
உதய நேரம் வர, களிப்பேன்;
மறைந்துபோன நேசரைக் காண்பேன்.

---

24. (167) For all the saints who from their labours rest

1 விஸ்வாசத்தோடு சாட்சி பகர்ந்தே
தம் வேலை முடித்தோர்நிமித்தமே,
கர்த்தாவே, உம்மைத் துதிசெய்வோம்.
அல்லேலூயா! அல்லேலூயா!

2 நீர் அவர் கோட்டை, வல் கன் மலையாம்;
நீர் யுத்தத்தில் சேனைத் தலைவராம்;
நீர் காரிருளில் பரஞ்சோதியாம்.
அல்லேலூயா! அல்லேலூயா!

3 முன் நாளில் பக்தர் நற் போராடியே
வென்றாற்போல் நாங்கள் வீரராகவே,
பொற் கிரீடம் பெற்றுக்கொள்வோமாகவே.
அல்லேலூயா! அல்லேலூயா!

4 இங்கே போராடி, நாங்கள் களைத்தும்,
உம் பக்தர் மேன்மையில் விளங்கினும்;
யாவரும் உம்மில் ஓர் சபை என்றும்.
அல்லேலூயா! அல்லேலூயா!

5 போர் நீண்டு மா கடூரமாகவே,
கெம்பீர கீதம் விண்ணில் கேட்குமே,
நாம் அதைக் கேட்டுத் தைரியம்கொள்வோமே.
அல்லேலூயா! அல்லேலூயா!

6 செவ்வானம் மேற்கில் தோன்றி ஒளிரும்,
மெய் வீரருக்கு ஓய்வு வாய்த்திடும்;
சீர் பரதீசில் பாக்கியம் அமையும்.
அல்லேலூயா! அல்லேலூயா!

7 மேலான பகல் பின் விடியும், பார்!
வென்றோர் கெம்பீரமாய் எழும்புவார்;
மாண்புறும் ராஜா முன்னே செல்லுவார்.
அல்லேலூயா! அல்லேலூயா!

8 அநந்த கூட்டம் நாற்றிசை நின்றும்
திரியேகருக்கு ஸ்தோத்திரம் பாடியும்
விண் மாட்சி வாசலுள் பிரவேசிக்கும்.
அல்லேலூயா! அல்லேலூயா!

---

25. (1) சங்கராபரணம். ரூபகதாளம்.

1 சத்தாய் நிஷ்களமாய் ஒருசாமிய மும்மிலதாய்,
சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே,
எத்தால் நானடியேன் கடைத்தேறுவன் என்பவந் தீர்ந்-து;
அத்தா, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

2 எம்மா விக்குருகி உயிரீந்து புரந்ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ? கடைகாறுங் கையடையாய்;
சும்மாரக்ஷணைசெய், சொல் சுதந்தரம் யாதுமிலேன்,
அம்மான், உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

3 திரைசேர் வெம்பவமாம் கடல் மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த் துய்க்கவென்றே புணையாயினை, கண்ணிலியான்
பரசேன் பற்றுகிலேன்; என்னைப்பற்றிய பற்று விடாய்;
அரசே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

4 தாயே தந்தைதமர் குரு சம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான், கதிவேறிலை நிண்ணயங்காண்;
'ஏயே' என்றிகழும் உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

---

26. (4) பூரிகல்யாணி. ஆதி.

ப சீர் திரியேக வஸ்தே நமோ நமோ,—நின்
திருவடிக்கு நமஸ்தே நமோ நமோ!
அ பார்படைத்தாளும் நாதா, பரம சற்பிரசாதா,
நாருறுந் தூயவேதா நமோ, நமோ, நமோ!—சீர்

1 தந்தைப் பராபரனே நமோ, நமோ, எமைத்
தாங்கி யாதரிப்போனே நமோ, நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய், சொல்லரும் நலமீந்
தாய்,
எந்தவிர் போக்குமெந்தாய், நமோ நமோ நமோ—சீர்

2 எங்கள் பவத்திஞசர் நமோ, நமோ, புது
எருசலேம் நகர்ராசா நமோ, நமோ!
எங்கும் நின் அரசேற, எவரும் நின் புகழ் கூற,
துங்கமர்தையிற்சேர, நமோ, நமோ, நமோ—சீர்

3 பரிசுத்த ஆவி தேவா நமோ நமோ, திட
பலமளித் தெமைக்காவா நமோ, நமோ!
கரிசித்துத்தா நற்புத்தி, கபடற்ற மனசுத்தி,
திருமொழி பற்றும்பக்தி நமோ, நமோ, நமோ,—சீர்

ஞா. சா.

---

27 (6) சங்கராபரணம். ஆதிதாளம்.

1 சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்,
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்
ஏர்குணனே, தோத்ரம், அடியார்க்கு
இரங்கிடுவாய், தோத்ரம், மா நேசா.

2 நேர்மிகு அருள் திரு அன்பா தோத்ரம்,
நித்தமு மெமக்கடியார்களின் தோத்ரம்,
ஆர் மணனே, தோத்ரம் உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா.

3 ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்,
தினம், தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்,
ஆவலுடன் தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா.

4 ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்,
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்,
சாற்றிகிறோம் தோத்ரம், உனது
தருமன்புக்கே தோத்ரம், மா நேசா.

5 மாரூப் பூரண நேசா, தோத்ரம்,
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்,
தாராய் துணை, தோத்ரம், இந்தத்
தருணமே கொடு, தோத்ரம் மா நேசா.

V. M.

---

28 (13) ஆனந்தபைரவி. ரூபகதாளம்.

பல்லவி

தோத்திரம், புகழ் கீர்த்தனம் ஜெய சோபனம்
உமக்கையா! — துதி
சொல்லவும் தீதை வெல்லவும் க்ருபை சூட்டுவீர்
கிறிஸ்தையா!

அனுபல்லவி

கோத்திரந்தனில் உயர்ந்த யூத நல் கொற்றவா,
தேவபாலா,
மனுவேலா, மறைநூலா செங்கோலானுகூலா, — தோத்

1

சரணங்கள்

என்தனை மீட்க நீர் இந்த உலகினில் வந்து பிறந்தீர் ;
நன் மனுவாய்—மறை
ஏற்றித் தினம் என்னை ஆற்றி நன் மொழியால்
தேற்றினீர் : முற்றிலும் தனுவாய்
நிந்தை அடைந்து மெய்ச்சொந்த உதிரத்தைச் சிந்தினீர் ;
எத்தனை பரிவாய்—தேவ
நீதிக்குத் திருப்தி செய்து பவமனு ஜாதிக்கிரங்கி
நற்குருவாய்
நின்றீரே, நடுவராய் நின்றீரே : தீதை எலாம்
கொன்றீரே, பசாசையும் வென்றீரே, ஜெயம் கொண்
டீரே, நித்ய—தோத்

2

சுத்த சுவிசேஷ சத்தியமொழியை விஸ்தரிக்க வரந்
தாரும் ;—நேய
சூரிய கிரண வீரியத்தால் எனக்காரோக்கிய அருள்
கூரும் ;
நித்தம் எனைத்தேவ பத்தியில் நடத்திச் சித்தம் இரங்கிக்
கண்பாரும் —கரம்
நீட்டிக் கிருபையைச் சூட்டிக் கவலையை ஓட்டி என்
துயரைத் தீரும் ;
நில்லும், ஐயா, என் பக்கத்தில் நில்லும், ஐயா, தினம்
மலம்
சொல்லும் ஐயா ; தீயோன் தனை வெல்லும் ஐயா ;
தீதைக்
கொல்லும், ஐயா, துய்யா !—தோத்

நித்திய ஜீவனைப் பெற்றும்மோடிருக்கச் சித்தி கரித்
தென்னை ஆளும் —பாவ
நிந்தையோ டென்சுய கந்தை அகற்றி மெய் விந்தைக்
கிருபையால் சூழும்;
சத்திய வசன வித்தால் என்னை ஜெனிப்பித் தென்
மனதினில் வாழும்—பதஞ்
சாற்றித் தினம் உம்மை போற்றிப் பணிந்திடத் தேற்றி
எனை அரசாளும்;
சற்குருவே, கிறிஸ்தெனும் சற்குருவே, ஜீவன் உள சொற்
குருவே நித்தியானந்த நற்குருவே, பர பொற்குருவே,
தேவே—தோத்

மரி. உப.

---

29 (17) பியாகு சாபுதாளம்

ப. கண்களை ஏறெடுப்பேன்—மாமேருநேராய் என்
கண்களை ஏறெடுப்பேன்.

அ விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்
தென்னில்லா வொத்தாசை என்றனுக்கேவரும்—
கண்

1 காலைத் தள்ளாட வொட்டார்—உறங்காது காப்பவர்
காலைத் தள்ளாட வொட்டார்,
வேலையில்நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர்.— கண்

2 பக்தர் நிழல் அவரே—எனை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அரே
எக்கால நிலைமையில் எனைச் சேதப்படுத்தா-து
அக்கோலம் கொண்டோனை அக்காலம் புரியவே— கண்

3 எல்லாத் தீமைகட்கும்—என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்,
பொல்லா உலகினில் போக்கு வரத்தையும்
நல்லாத்து மாவையும் நாடோறும் காப்பவர்— கண்

T. A.

30. (18) காம்போதி ஆதிதாளம்

ப. பாடித்துதி மனமே; பரனைக் கொண்-டு
ஆடித் துதி தினமே.

அ. நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சதத்தை வாசித்து வாசித்துப் — பாடி

1 தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னுறச்
செப்பின தேவபரன் இந்தக்காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
வழுத்தின அன்பை விழித்துத் தியானித்துப் — பாடி

2 சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையில் கிடந்த புறச்சாதியாம் எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோஷத்துக்காகப் — பாடி

3 எத்தனை தீர்க்கர், அநேக அப்போஸ்தலர்,
எத்தனை போதகர்கள், இரத்தச் சாட்சிகள்,
எத்தனை வேணுமோ அத்தனையும் தந்திங்-கு
இத்தனையாய்க் க்ருபை வைத்த நம் கர்த்தனைப் —
பாடி

வே. சா.

---

31. (85) பைரவி. ஆதிதாளம்

ப. தோத்திரஞ் செய்வேனே: — ரட்சகனைத்
தோத்திரஞ் செய்வேனே —

அ. பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை, யூதக் கோத்திரனை, என்றும் —
தோத்

1 அன்னை மரி சுதனை, — புல் மீது
அமிழ்துக் கழுதவனை,
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை நூற்படி, இங்கிலத் துற்றோனை, — தோத்

2 கந்தை பொதிந்தவனை,—வானோர்களும்
வந்தடி பணிபவனை
மந்தையர்க் கானந்த மாட்சியளித்தோனை,
மான பரன் என்னும் ஞான குணவானை,— தோத்

3 செம்பொன் னுருவானைத்,—தேசிகர்கள்
தேடும் குருவானை,
அம்பரம் மேவிய உம்பர் கணத்தோடு
அன்புபெற நின்று, பைம் பொன் மலர் தூவி,—
தோத்

ச. பி.

---

32 (80) எதுகுலகாம்போதி. ஆதிதாளம்.

ப ஏசுவையே துதிசெய் நீ, மனமே,
ஏசுவையே துதிசெய்—கிறிஸ் தேசுவையே.

1. மாசணு காத பராபர வஸ்து,
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து,— ஏசு

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்,
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன்,— ஏசு

3. எண்ணின காரியம் யாவு முகிக்க,
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க,— ஏசு

வே. சா.

---

33 (360) பியாகு. சாபுதாளம்.

ப. எந்நாளுமே துதிப்பாய்—என்னுத்துமாவே, நீ
எந்நாளுமே துதிப்பாய்!

அ. இந்நாள் வரையிலே உன்னதனூர் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவு மறவாது,— எந்

1 பாவங்கள் எத்தனையோ,—நினையா திருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ?
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மகாதயவை எண்ணி,— எந்

2 எத்தனையோ கிருபை,—உன்னுயிர்க்குச் செய்தாரே,
எத்தனையோ கிருபை?
நித்தமுனைமுடி சூட்டின துமன்றி,
நித்தியமான ஜீவனை மீட்டதால்,— எங்

3 நன்மையாலுன் வாயை—நிறைத்தாரே, பூர்த்தியாய்
நன்மையாலுன வாயை;
உன் வயது கழுகைப்போல் பலங்கொண்டு
ஓங்கு இளமைபோலாகவே செய்ததால்,— எங்

4 பூமிக்கும் வானத்துக்கும்—உள்ள தூரம் போலவே,
பூமிக்கும் வானத்துக்கும்,
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே, சத்திய மேயிது.— எங்

5 மன்னிப்பு மாட்சிமையாம்—மாதேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்;
எண்ணுவாயோ கிழக்கும் மேற்கும் தூரமே?
எல்லாம் உன்பாவம் அகன்றதத்தூரமே — எங்

6 தந்தை தன் பிள்ளைகட்குத்—தயாவோ டிரங் காளுே
தந்தை தன் பிள்ளைகட்கு,
எந்த வேளையும் அவ ரோடுநீ தங்கினல்
ஏற்றிப் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே— எங்

சா. ப.

---

34. (81) சூரியகாந்தம் ரூபகதாளம

1. துதிதங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்,
சுப மங்கள மிகு சம்பிரம சுப சோபன க்ஷேமம்!

2. அதி சுந்தர நிறை கொண்டுயர் அருள் பௌக்ஷிஷ
தீபன்
கதி உம்பர்கள் தொழும் இங்கித கருணைப்பிர தாபன்,
— துதி

3. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய
அத்தனார்
நிந்தையாய் ஒரு கந்தை மூடவும் வந்த மாபரி
சுத்தனார்—துதி

4. திருவான் உலகரசாய் வளர் தேவசொரூபனார்
ஒரு மாதுடை வினை மாறிட நரா ரூபமதானார்—துதி

5. அபிராம் முனியிடமேவிய பதிலாள் உபகாரன்
எபிரேயர்கள் குலம் தாவீதென் அரசற்கோர் குமாரன்
—துதி

6. சாதாரண வேதாகம சாஸ்த்ர சுவிசேஷன்,
கோதேபுரி ஆதாமுடை கோதர திருவேஷன்—துதி

7. விண்ணாடரும் மண்ணாடரும் மேவுந் திருப்பாதன்,
பண்ணோதுவர் கண்ணாம் வளர் பர மண்டல நாதன்
—துதி

வே. சா.

---

35. (78) ஆனந்தபைரவி ஆதிதாளம்

ப ஆத்துமமே, என் முழு உள்ளமே,—உன்
ஆண்டவரைத் தொழுதேத்து;—இந்நாள்வரை
அன்புவைத்தாதரித்த ஆண்டவரைத் தொழு
தேத்து

1 போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள —ஆண்

2 தலை முறை தலை முறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத —ஆண்

3 தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத்தருளும், மேலான —ஆண்

4 வாதை, நோய், துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும் தயை செய்துயிர் தந்த —ஆண்

5 உற்றனைக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் —ஆண்

6 துதி மிகுந்தேறத் தோத்திரி தினமே,
இதயமே, உள்ளமே, என் மனமே —ஆண்

தை. வா.

---

36. சிந்து பைரவி. ஆதிதாளம்

ப. ஆனந்தமே பரமானந்தமே—இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே.

ச. 1 இந்தப்புவி ஒரு சொந்தமல்ல வென்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே:
இக்கட்டுத் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும்—
ஆனந்தமே

2 கர்த்தாவே நீர் என்றன் காருண்யக் கோட்டையே
காரணமின்றிக் கலங்கேனே யான்;
விஸ்வாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான பிடித்திடுமே—ஆனந்தமே

3 என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்க்
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது?
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெயகீதம் பாடி மகிழ்ந்திடலாம்.—ஆனந்தமே

4 கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ?
கைவேலையல்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ.—
ஆனந்தமே

5 துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்,
சொல்லிமுடியாத ஆறுதல் கிருபையைத்
துன்பத்தினூடே அனுப்பிடுவார்—ஆனந்தமே

6 இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேன் ;
என் நேசர் தன்முக ஜோதி யதேயல்லால்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை.—ஆனந்தமே

சாது கொச்சுக்குஞ்சு.

---

37. 340) மோஹன கல்யாணி சாபுதாளம்

ப. ஓய்வுநாள் இது, மனமே,—தேவனின்
உரை யைத் தியா னஞ் செய கவனமே.

அ. நேய தந்தையர் சேயர்க் குதவிய
நெறி இச் சுவிசேஷ வசனமே.— ஓய்

1 ஜீவ சுக புத்ர செல்வம் தந்தவர்
சேவடி உனக் கபயமே ;
மேவி அவர் கிருபாசனத்தின் முன்
வேண்டிக்கொள், இது சமயமே.— ஓய்

2 ஆறு நாளுனக் களித்தவர், இளைப்
பாறி ஏழினில் களித்தவர்
கூறும் பூரண ஆசீர்வாதத்தைக்
குறித்துனை இதற சழைக்கிறார்.— ஓய்

3 கர்த்தர் ஆசனம் குறுகிக் கேள் இன்று
காலை நண்பகல் மாலையும் ;
சுத்தம் நாடுவோர் யாவரும் வந்து
துதி செய்யும் இத் தேவாலயம்.— ஓய்

பா.

38\. (27) செஞ்சுருட்டி — திஸ்ர ஏகதாளம்

ப. வானம் பூமியோ ? பராபரன்
மானிடன் ஆனாரோ ? என்ன இது ?

அ. ஞானவான்களே, நிதானவான்களே,—என்ன
இது ?—வா

1 பொன்னகர தாளும், உன்னதமே நீளும்
பொறுமைக் கிருபாசனத்துரை,
பூபதி வந்ததே ததிசயம் ?—ஆ ! என்ன இது ?—வா

2 சத்ய சருவேசன் துத்ய கிருபைவாசன்,
நித்ய பிதாவினோர்
மகத்துவக் குமாரனோ இவர் ?—ஆ ! என்ன இது ?
—வா

3 மந்தைக்காட்டிலே மாட்டுக் கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூழச்சி,
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி !—ஆ !
என்ன இது ?—வா

4 வேறே பேரல்ல, சுரர் விண்ணவர் ஆருமல்ல ;
மாறில்லாத ஈறில்லாத வல்லமைத் தேவனே
புல்லில் கிடக்கிறார் !—ஆ ! என்ன இது !—வா

5 சீயோனின் மாதே, இனி க்ஷணந்தரியாதே,
மாயமென்ன ? உனக்குச் சொல்லவோ ?
வந்தவர் மணவாளனல்லவோ ?—ஆ ! என்ன இது ?
—வா

வே. சா.

39. (33) சரசாங்கி திஸ்ர ஏகதாளம்.

ப. பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித்துதி, மனமே—இன்னும்

1 சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர்—இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானர்.—பெ

2 சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனர்— இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறர்.— பெ

3 முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக—இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே.—
பெ

4 ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர்.—
இங்கு
ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார்— பெ

5 இந்தடைவாய் அன்புவைத்த எம்பெருமானை—நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே— பெ

J. P.

---

40. (43) சங்கராபரணம் ஆதிதாளம்

ப. ஓசன்ன பாடுவோம் ஏசுவின் தாசரே
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்ன!

ச. முன்னும் பின்னும் சாலேம்நகர் சின்னப் பாலர்
பாடினர்
அன்றுபோல இன்றும் நாமும் அன்பாய்த் துதி
பாடுவோம்—ஓ

2 சின்னமறி மீதில் ஏறி அன்பர் பவனி போனர்
இன்னும் என் அகத்தில் அவர் வந்து அரசாளுவார்
—ஓ

3 பாவமதைப் போக்கவும் இப் பாவியைக் கைதூக்கவும்
பாசமுள்ள ஏசையா பவனியாகப் போகிறார்— ஓ

4 பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர் வீணையோடு பாடித் தாளை முத்தி செய்குவோம்
—ஓ

5 குருத்தோலை ஞாயிற்றில் நம் குரு பாதம் பணிவோம்
குருவருள் பெற்று நாமும் திரியேகரைப்
போற்றுவோம்—ஓ

---

41. (60) புன்னாகவராளி. ஆதிதாளம்.

ப. எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர்?

1 எங்கே சுமந்து போகிறீர்? இந்தக் கானலில் உடைந்து
அங்கம் முழுதும் நோக, ஐயா, என் ஏசுநாதா;—எங்

2 தோளில் பாரம் அழுத்த, தூக்கப்பெலம் இல்லாமல்,
தாளுந் தத்தளிக்கவே, தாப சோபம் உற, நீர்,—எங்

3 வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாக
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத்தாங்கிவர—எங்

4 தாயார் அழுதுவரச் சார்ந்தவர் பின்தொடர,
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பிவர,—எங்

5 வல்ல பேயைக் கொல்லவும் மரணந்தனை வெல்லவும்
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும்—எங்

6 மாசணுகாத சத்திய வாசகனே, உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்து
—எங்

யே. அ.

---

42. (132) கரகரப்பிரியை • ஆதிதாளம்

ப மரித்தாரே கிறிஸ்தேசு
உனக்காகப் பாவி.

1 திரித்துவத் துதித்தோர் தெய்வீக சேயே,
தீன தயாள தவ மனுவேலே பாராய்; —மரி

2 லோகத்தின் பாவத்தைத் தேகத்தில் சுமந்தே,
லோலாயமாய்ச் சிலுவையிலே பாராய்; —மரி

3 மகத்தான தண்டனை நிவிர்த்திப்பதற்கே,
மா பாடுபட்டுத் தரித்ததே பாராய்; —மரி

4 மன்னிப்புண் டாக்கவே மத்தியஸ்தராக,
மாவாதைக் குள்ளானார் தாமே நீ பாராய்; —மரி

ஞா. பா.

---

43. (55) ஆனந்தபைரவி ரூபகதாளம்.

ப. கல்வாரி மலையோரம் வாரும்,
பாவம் தீரும்.

அ.ப. செல்வராயன் கிறிஸ்து தியாகேசன் தொங்குறூரே

ச 1 லோகத்தின் பாவமெல்லாம் ஏகமாய்த் திரண்டு,
நொம்பலப் படவைக்க ஐயன்மேல் உருண்டு,
தாகத்தால் உடல்வாடிக் கருகியே சுருண்டு,
சடலமெலாம் உதிரப் பிரளயம் புரண்டு,
சாகின்றூரே நமது தாதா ஜீவதாதா—ஜோகி கல்

2 ஒண்முடி மன்னனுக்கு முண்முடியாச்சோ?
உபகாரம் புரிகரம் சிதையவும் ஆச்சோ?
விண்ணிலுலாவும் பாதம் புண்ணாகலாச்சோ?
மேனியெல்லாம் வீங்கி விதனிக்கலாச்சோ?
மேசையன் அப்பன் கோபம் மேலே இதற்குமேலே
—ஜோகி கல்

3 மலர்ந்த சுந்தரக் கண்கள் மயங்கலுமேனோ?
மதுரிக்கும் திருநாவு வறண்டதுமேனோ?
தளர்ந்திடாத் திருக்கைகள் துவண்டதுமேனோ?
ஜலத்தில் நடந்த பாதம் சவண்டதுமேனோ?
சண்டாளர்கள் நம்மால்தானே, நம்மால்தானே
—ஜோகி கல்

4 இரட்சகனை மறந்தால் இரட்சண்யம் இல்லை,
நாமக்கிறிஸ்தவர்க்கு இருபங்கு தொல்லை,
பட்ச பாதம் ஒன்றும் பரதீசில் இல்லை,
பரதீசில் பங்கில்லோர்க்குப் பாடென்றும் தொல்லை,
பந்தயத்திலே முந்தப்பாரும், முந்தப்பாரும்—
ஜோகி கல்

இரா. பரா.

---

44. (199) உசேனி. ரூபகதாளம்.

ப என் உள்ளங் கவரும்,—நீர் மரித்த
இன்பக் குருசண்டை இன்னும் நெருங்கிட—என்

அ என்பாவம் போக்கவே ஈட்டியால் குத்துண்டு
இரத்தம், தண்ணீர் வழிந்தோடும் விலாவண்டை
—என்

1 உன்தன் மகா இன்ப சத்தம் நான் கேட்டவன்,
உமதாசசரிய அன்பை உணர்ந்தவன்,
எந்தையே, நானும்மைச் சேர்ந்தவனாயினும்,
இன்னும் நெருங்கி நான் உம்மண்டை சேர்ந்திட,—
என்

2 சுத்தக்கிருபையின் வல்லமையால் என்னை
முத்திரியும்† உமக்கூழியம் செய்திட,
அத்தனே, உம்மில் நல் நம்பிக்கையாய் உன் தன்
சித்தமே என் சித்தமாகப் பிழைத்திட, —என்

---

†முத்திரை செய்யும்

3 உன்தனடிதனில் உறைந்து தனித்து
ஓர் மணி நேரம் கழிப்பதே பாக்கியம்;
என் தேவனே, அதி நேசமாய் உம்முடன்
இன்பச் சம்பாஷணை செய்வதே ஆனந்தம் —என்

4 அம்பரா மரண ஆழி தாண்டும் வரை
அறிய முடியா அன்பின் ஆழம் உண்டு;
என்பரனே, உந்தன் அன்பின் ஆழத்தை நான்
இம்மையில் கூடியமட்டும் அறிந்திட. —என்

வே. ச.

---

45. (67) சங்கராபரணம் திஸ்ர ஏகதாளம்.

ப. ஆமென் அல்லேலுயா ! மகத்துவத் தம்பரா பரா;
ஆமென் அல்லேலுயா ! ஜெயம் ! ஜெயம் !
அனந்த ஸ்தோத்திரா.

அ. தொல்லை அனுதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே !—அல்லேலு

1 வெற்றிகொண் டார்ப்பரித்து,—கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து,—முறித்து;
பத்ராசனக் கிறிஸ்து—மரித்து,
பாடுபட்டுத்தரித்து, முடித்தார்.—அல்லேலு

2 சாவின் கூர் ஒடிந்து—மடிந்து,
தடுப்புச் சுவா இடிந்து—விழுந்து,
ஜீவனே விடிந்து—தேவாலயத்
திரை ரண்டாய்க்கிழிந்து ஒழிந்தது,—அல்லேலு

3 வேதம் நிறைவேற்றி,—மெய் தோற்றி,
மீட்டுக்கரை யேற்றி,—பொய் மாற்றி,
பாவிகளைத் தேற்றி,—கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி,—வாழ்வித்தார்—அல்லேலு

வே சா.

46. (68 பியாகு ஆதிதாளம்

ப. எழுந்தார் இறைவன்—ஜெயமே ஜெயமெனவே
எழுந்தார் இறைவன்.

1 விழுந்தவரைக் கரையேற்றப்—பாவத்
தழுந்து மனுக்குலத்தை மாற்ற—விண்ணுக்
கெழுந்து நாம் அவரையே போற்ற— எழு

2 செத்தவர் மீண்டுமே பிழைக்க—உயர்
நித்திய ஜீவனை அளிக்கத்—தேவ
பக்தர் யாவரும் களிக்க— எழு

3 கருதிய காரியம் வாய்க்கத்—தேவ
சுருதி மொழிகளெல்லாம் காக்க—நம்
இரு திறத்தாரையும் சேர்க்க— எழு

4 சாவின் பயங்கரத்தை ஒழிக்க—கெட்ட
ஆவியின் வல்லமையை அழிக்க—இப்
பூவின்மீது சபை செழிக்க— எழு

5 ஏதுந் தீவினை செய்யாத் தூயன்—எப்
போதுமே நன்மைபுரி நேயன்—தப்
பாது காத்திடும் நல்லாயன்— எழு

சா. ப.

---

47. (97) சாவேரி ஆதிதாளம்.

ப. இத்தரை மீதினில் வித்தகஞ் யெழுந்த
உத்தமனே தோத்ரம்!

அ. நித்தமென் னிருதயம் சுத்தமாக விளங்கச்
சித்தங்கொள் வாயென்மீது, தத்தஞ்செய்
தேனிப்போது —இத்

1 கண்ணே மணியே உன்னைக் கண்டபின் விடுவேனோ?
காதலாய்ப் பவத்தில்வீண் காலம்பின் னிடுவேனோ?
விண்ணே யுனை மறந்து வேறொன்றைத்
தொடுவேனோ?
வேஷமார்க்கம் நடந்து வேதனைப்படுவேனோ?—இத்

2 அன்னையும் தந்தையம் ஆளும் பொருளும் நீயே;
ஆசாரியன் தீர்க்கன் ஆயனும் ஆடும் நீயே;
உன்னைப் பிரிந்தால் வேறு போக வழியிலையே;
உத்தம சத்திய முத்தே அதிபதியே!— இத்

3 தேவனே, கனியே என்றுந் திகட்டாத அமிர்தமே,
நீயனென் மனப்புண்கள் ஆற்றிடும் அவிழ்தமே,
வானே யிருந்துபுவி வந்த பெரும் பதமே,
மறவாத திருப்புகழ் வரைவேன் நிதம் நிதமே.—இத்

4 வானுசனத்திருந்து மனுக்குலத்தை நினைந்து
தானுமனமுவந்து தாரணியில் பிறந்து,
கோனாய் விளங்கா நிற்கும் குருவேசுநாதனை நான்
ஏனோ மறந்து வீணே இங்கே தவிப்பது காண்.—இத்

5 செஞ்சோதிபோன்ற அவன் சீர்பாதத்தை எந்நாளும்
நெஞ்சாசனத்தில் வைத்து நீடூழி வாழ்த்தல் வேணும்,
பஞ்சாய்ப் பறந்திடுமென் பஞ்சபாதகம் யாவும்,
அஞ்சேன் அஞ்சேனே, தேவதஞ்சம் கண்டதே
போதும்—இத்

சா. பா.

---

48. (82) பியாகு ஆதிதாளம்

ப. இவரே பெருமான், மற்றப்பேர்
அலவே பூமான்—இவரே பெருமான்.

1 கவலைக் கிடங்கொடுத் தறியார்,—வேறு
பவவினை யாதுமே தெரியார்,—இப்
புவன மீது நமக்குரியார்.— இவரே

2 குருடர்களுக் குதவும் விழியாம்,—பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம்,—தெய்வம்
இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம்.— இவரே

3 பலபிணி தீர்க்கும் பரிகாரி,— சொல்லும்
வலமையில் மிக்க விபகாரி,—எக்
குலத்துக்கும் நல்ல உபகாரி.— இவரே

4 அறஞ்செய்வதனில் ஒரு சித்தன்,—கொடு
மறம்விடு பவர்க்கருள் மூத்தன்,—இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன்.— இவரே

5 அலகைதனை ஜெயித்த வீரன்,—பவ
உலகை ரட்சித்த எழிற்பேரன்,—விண்
ணுலகு வாழ் தேவ குமாரன்.— இவரே

6 பொன்னுலகந் தனில்வாழ் யோகன்,—அருள்
துன்ன உலகில் நன்மைத் தேகன்,—நம்பால்
தன்னை யளித்த ஓர் தியாகன்— இவரே

த. ஐ.

---

49. (208) பியாக். ஆதிதாளம்.

ப. என்மீட்பர் உயிரோடிருக்கையிலே—எனக்
கென்ன குறைவுண்டு? நீ சொல், மனமே.

1 என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்,
விண்ணுலகுயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்,
மித்திரனே, சுகபத்திர மருளும்— என்

2 பாபமோ மரணமோ, நரகமோ, பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்:
சஞ்சலமினியேன்? நெஞ்சமே, மகிழாய்.— என்

3 ஆசி செய்திடுவார், அருள் மிக அளிப்பார்,
அம்பரந்தனி லெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார் முன்னமே நடப்பார்
மோட்சவழிசத்ய வாசல்உயிரெனும்— என்

4 கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,
கடைசிமட்டும் கைவிடாதிருப்பார்;
பவமன்னிப்பளிப்பார் பாக்கியங் கொடுப்பார்,
பரமபதவியினுள் என்தனை எடுப்பார்.— என்

5 போனது போகட்டும் புவிவசை பேசட்டும்,
பொல்லான் அம்புகளெய்திடட்டும்
ஆனது ஆகட்டும், அருள்மழை பெய்திடும்,
அன்பு மிகும் பேரின்பமெனக் கருள்— என்

ஞா. சா.

---

50. (70) பூரிகல்யாணி ஆதிதாளம்

ப. மகிழ், மகிழ் மங்கையே, நீ; அல்லேலூயா! பரன்
மைந்தன் பரமேறினர், அல்லேலூயா!

அ. மகிழ், மகிழ்: பரன் மைந்தன் மகத்துவப்
பரமேறினர்;
திகழ் திருச்சேனை பாடும் அல்லேலூயா, இன்று
—மகிழ்

1 வானமெல்லாம் நிரப்ப மனுஷ மைந்தன் எல்லா
வானங்கள் மேலேறினர், அல்லேலூயா!
தீன தயாளு நம்மைச் சேர்ந்த தலைவராயினர்,
ஞானமுடன் பாடுங்கள், அல்லேலூயா, இன்று
—மகிழ்

2 ஏசுபரன் நமக்கு இறையானர்; இது
எல்லாவர்க்குஞ் சந்தோஷம், அல்லேலூயா!
வாசம் நாம் செய்யத் தந்தை வளைவில் இடம் பிடித்த
நேச முன்னத நேசம், அல்லேலூயா, இன்று
—மகிழ்

3 தந்தை வலப்பாகத்தில் சத்திய கிறிஸ்து எங்கள்.
சத்துருக்கள் மேற் சிறந்தார், அல்லேலூயா!
சொந்தக் காயங்கள் காட்டிச் சுகிர்தமுடன் ஜெபிப்
பார்;
மந்தையே உன்தனுக்காய் அல்லேலூயா, இன்று
—மகிழ்

4 மோட்ச சுதந்தரர் நாம் வானோருக்கும் ஒப்பர்,
முடிவில்லாப் பாக்கியர் நாம், அல்லேலூயா!
பாழ்ஜெகம் நிலையல்ல, பரம சஞ்சாரிகள் நாம்
சூட்சுமக் கர்த்தனுக்கே அல்லேலூயா, இன்று
—மகிழ்

5 பூதல மந்தமட்டும் உங்களுடனே நித்தம்
புனிதன் இருப்பேனென்றார், அல்லேலூயா!
ஏதெமக்குக் குறைச்சல், ஏசெங்களோடிருந்தால்,
யாது மோசந்தொடரும்? அல்லேலூயா, இன்று
—மகிழ்

ஞா. சா.

---

51. (112) நாதநாமக்கிரியை. ரூபகதாளம்

ப உன்தன் ஆவியே, சுவாமி, என்தன் மீதினில்
வந்துசேரவே, அருள் தந்து காவுமே.

ச முந்துமானிடர் வினை தந்த சாபமும்
நிந்தை யாவுமே பட வந்த ஏசுவே —உன்தன்

1 மதி மயக்குதே, பேயும் மனதியக்குதே
அதிகமாய்க் கடல் அலை அறைந்து பாய்தே
—உன்தன்

2 சச்ய ஆவியைச் சீடர்க் கித்தரை விட,
சித்தமாய் உரை புரி நித்ய தேவனே —உன்தன

3 பெந்தேகோஸ்தெனும் மா சிறந்த நாளிலே
விந்தை ஆவியின் அருள் தந்த நேர்மையே—உன் தன்

4 தாசன் யானுமே புகழ் வீசும் வாய்மையே
வாசமாகவே அருள், நேச தேவனே —உன் தன்

சவ. உபா.

---

52. (116) அமீர்கல்யாணி. சாபுதாளம்

ப ஆவியை மழைபோலே யூற்றும்,—பல
சாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்.

அ பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே,
பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும். —ஆவி

1 அன்பினால் ஜீவனை விட்டீர்;—ஆவி
அருள் மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்;
இன்பப்பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராளமான ஜனங்களைச் சேரும். —ஆவி

2 சிதறுண்டலைகிற ஆட்டைப்—பின்னும்
தேடிப்பிடித்து நீர் தூக்கிச் சுமந்து,
பதறாதே நான்தான் உன் நல்மேய்ப்பன் யேசு
பாக்கியரென்னும் நல் வாக்கையருளும் —ஆவி

3 காத்திருந்த பல பேரும்—மனங்
கடினங்கொள்ளா முன்னே உம் பாதஞ் சேரும்;
தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து
சுத்தலோகம் வரத் தூயாவி யூற்றும் —ஆவி

4 தோத்திரக் கீதங்கள் பாடி—எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாதகிராக அநேக ரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள் மாரி யூற்றும. —ஆவி

அ. பி.

---

53. (119) கரஹரப்பிரியா. ஆதிதாளம்.

ப வரவேணும் பரனுவியே, இறங்குஞ் சுடராய் மேவியே

அ மருளாம் பாவம் மருவிய எனக்கு
வானக்கினியால் ஞான தீட்சை தர, —வர

1 பலமான எப்பாவமும் பாழாக்கும் மாநோய்களும்
வலியகொடும் ரோகமும் மாம்சசிந்தை ஓடுமே;
பலிபீடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்,
எலியாவின் ஜெபத்துக்கிரங்கிய வண்ணம். —வர

2 என்றன் பாவம் யாவையும் எரிக்கும்வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காண்கிலேன்
என்றன் செயலால் யாதொன்றும் முடியா
தின்றே வானக் கினி வரவேணும். —வர

3 குடிகொள் எந்தப் பாவமும் அடியோடே தொலைத்
திடும்,
தடுத்தாட்கொள்ளும், தோஷமும் சாம்பலாகச் செய்
திடும்:
படிமீது காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல்போல்
அடியேன் யேசுவுக் கனுதினம் பணி செய்ய. —வர

வே. ச.

---

54. (121) மணிரங்கு ஏகதாளம்

தீயமனதை மாற்ற வாரும், தூய ஆவியே,—கன
நேய மேவியே.

1 மாய பாசத் தழுந்தி வாடி மாளுஞ் சாவிதால்,—மிக
மாயும் பாவி நான்— தீய

2 தீமைசெய்ய நாடுதென்றன் திருக்குநெஞ்சமே,
—மருள்
தீர்க்கும் தஞ்சமே.— தீய

3 பாத்தை நோக்க மனம் அற்றேனே, பதடிதான் ஐயா;—ஒரு
பாவி நான், ஐயா.— தீய

4 புதிய சிந்தை, புதிய ஆசை புதப்பித்தாக்கவே,—அதைப்
புகழ்ந்து காக்கவே.— தீய

5 ஏக்கத் தோடென் மீட்பைத் தேடி, இரந்து கெஞ்சவே,—தினம்
இதயம் அஞ்சவே— தீய

6 கிறிஸ்து மீது நாட்டங்கொண்டு கீதம் பாடவே —அவர்
கிருபை தேடவே.— தீய

7 தேவ வசனப்பாலின் மீது தேட்டம் உன்னவே,—மிக
தெளிவு துன்னவே.— தீய

8 ஜெபத்தின் தாகம் அகத்தில் ஊறி ஜெபித்துப்
போற்றவே,—மிகச் – சிறப்பாய் ஏற்றவே— தீய

வி. போ.

---

55 (144) மோகனம். ஆதிதாளம்.

ப. பாவி, என்னிடம் வர மனதில்லையா? ஓ! பாவி

1 பாவத்துள் மூழ்கிச் சாவுற்றாயே நீ,
ஜீவன் தனைப் பெறவே,— ஓ! பாவி

2 இருளுக்குட்சிக்கி அருளற்றுப் போனாய்த்
தெருளொளி தனைப்பெறவே,— ஓ! பாவி

3 என் சமாதானம் உன் சுகமாகும்,
நெஞ்சைப் பூராய்த்திறந்து,— ஓ! பாவி

4 அசுத்தங்கள் நீங்கப் பசி தாகமில்லையோ?
பரிசுத்தஞ் செய்வேனே,— ஓ! பாவி

5 மண்ணிலே நேசம் வைப்பாயோ மோசம்!
விண்ணிலிடங் கிடையா,— ஓ! பாவி

6 எனதிடம் அருகும் எவரையுந் தள்ளேன்;
க்ஷணத்தில் விரைந்திடுவாய்.— ஓ! பாவி

வே. மா.

---

56. (145) ஹரிகாம்போதி. ஏகதாளம்.

ப. வா, பாவீ, மலைத்து நில்லாதே, வா.

1 என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென்
றெண்ணித் திகையாதே;
உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே,
உள்ளபடிவாவேன்— வா

2 உன்றனுக்காகவே நானேயடிபட்டேன்,
உன்தன் பாவத்தைச் சுமந்தேன்;
சிந்திய என் திரு ரத்தத்தால் உன் பாவம்
தீர்த்து விட்டேன், பாவி, வா,— வா

3 கொடிய பாவத்தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ?
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்,
ஒன்றுக்கும் அஞ்சாதே வா. வா

4 விலக யாதொரு கதியில்லாதவன்
உலகை நம்பலாமோ?
சிலுவை பாவிகளடைக்கலமல்லோ?
சீக்கிரம் ஓடிவாவேன்.— வா

5 என்னிடத்தில் வரும் பாவி யெவரையும்
இகழ்ந்து தளளேனே;
முன்னிய மேலோக வாழ்வை யருள்வேனே,
வாராயோ, பாவி? வா

தே. உபா.

57. (150) ஹரிகாம்போதி. ஆதிதாளம்.

ப மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ?—மோட்ச
வாழ்வைத தருவேன், இது பாராயோ?

1 அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே,—பாவ
அழுக்கை நீக்கி யருள் கொடுப்பேனே —மக

2 உன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே.—அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே, —மக

3 பாவம் அனைத்துமே விட்டோடாயோ?—நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ? —மக

4 உலக வாழ்வினை விட்டகல்வாயே,—மகா
உவப்பாய் கதி ஈவேன்; மகிழ்வாயே. —மக

5 உன்றன் ஆத்துமத்தை நீ படைப்பாயே—அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே. —மக

ச. யோ.

58. (135) செஞ்சுருட்டி ரூபகதாளம்

ப பாவம் போககும் ஜீவ நதியைப்
பாராய, வந்து பாராய்.—பாவி!

அ தீவினை தீர்க்கும் தேவமறியின்
திருரத்த மிந்த ஆறும்,—பாவி! —பாவம்

1 கல்வாரி மலைச்சிகர மீதூற்றுக்
கண்கள் ஐந்து திறந்தே;—அதோ!
மல்கிச் சிலுவை யடியில் விழுந்து
வழிந்தோடுது பாராய்,—பாவி! —பாவம்

2 பாவச் சுமையால் நொந்து சோர்ந்து
பதறிவிழுந் தலறி—நிதம்
கூவியழுத அனந்தம் பேரிதில்
குளித்தே யுளங்களித்தார்—பாவி! —பாவம்

3 பக்தருளத்தி லிடைவிடாமல்
பாய்ந்து வள மீந்து —அதை
நித்தமும் பரிசுத்த குணத்தில்
நிலைநாட்டுது பாராய்,—பாவி! —பாவம்

4 ஒருதர மிந்த நதியின் தீர்த்தம்
உண்டோர் ஜீவன் கண்டோர்,—தாகம்
அறுதி யடைவர் வேறொரு நதிக்
கலையார், தேடி யலையார்,—பாவி! —பாவம்

5 நித்தியந்தனில் கலந்துறையுஞ் செந்
நீரார் நதி யிதிலே—தங்கள்
வஸ்திரந் தோய்த்த சுத்தர் சபையில்
வாழ்ந்து கீதம் பாடாய்;—பாவி! —பாவம்

ஜி. சே. வே.

---

59. (152) கமாஸ் ரூபகதாளம்

ப நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி,
நீயுனக்குச் சொந்தமல்லவே.

அ நீயுனக்குச் சொந்தமல்லவே,
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம். —நீ

1 சிலுவைமரத்திற்றொங்கி மரித்தாரே திருரத்தம்,
ரத்தம்
திருவிலாவில் வடியுது, பாரே;
வலிய பரிசத்தால் கொண்டாரே;
வான மகிமை உனக்கீவாரே. —நீ

2 இந்த நன்றியை மறந்து போனாயோ? யேசுவைவிட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுன திதயங் காயமும்,
சாமி கிறிஸ்தினுடையதல்லவோ? —நீ

3 பழையபாவத்தாசை வருகுதோ? பசாசின்மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமிஷத் தாசை காட்டியே,
அக்கினிக் கடல் தள்ளுவானேன்? —நீ

4 பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே; உலகை விட்டுப்
பிரியினும் அவர்க்கே மரிப்பாயே,
உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்,
உயர் பதவியில் என்றும் நிலைப்பாய். —நீ

தே. உபா.

---

60. (166) முகாரி சாபுதாளம்

ப. ஐயையா, நான் பாவி,—என்னை ஆளும் தயாபரனே!

1 பொய்யாம் உலக உல்லாசத்தினால் மனம்
போனவழி நடந்தேன்;—ஏ
சையா, அபயம் அபயம்! இரங்கும், மே
சையா, என் தாதாவே.— ஐயை

2 எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள்,
எத்தனை தீதுகளோ? என-(து)
அத்தனே! என் பிழை அத்தனையும் பொறுத்
தாண்டருளும், கோவே.— ஐயை

3 வஞ்சகமோ கரவோ, கபடோ, மாய்
மாலமோ, ரண்டகமோ?—மனச்
சஞ்சலம் நீக்கி எனக்கருள செய்யும்,
சமஸ்த நன்மைக் கடலே.— ஐயை

4 பொய்யும், புரட்டும் உருட்டும், திருட்டும்,
பொறாமையும் ஆணவமும — விட்
டுய்யும்படி அருள் செய்யும், அனாதி ஓர்
ஏகதிரித்துவனே — ஐயை

5 உன்னை எல்லாத்திலும் பார்க்கச் சிநேகித்
துனதடியார்களையும், — நான்
என்னைச் சிநேகிக்கிறாற்போல் சிநேகிக்க
ஏவும் பராபரனே! ஐயை

வே. சா.

---

61. (163) தன்யாசி. ஆதிதாளம்.

ப. எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!
எளியேன் மேல் இரங்கை யனே.

அ. நித்தம் என் இருதயம் தீயதென்பரனே;
நிலைவரம் எனில் இல்லை: நீ என் தாபரமே — எத்

1 பத்தம் உன்மேல் எனக்கில்லை என்பேனோ?
பணிந்திடல் ஒழிவேனோ?
சுத்தமுறும் கரங்கால்கள, விலாவினில்
தோன்றுது காயங்கள், தூய சிநேகா! — எத்

2 என்தன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடாதிருக்கையிலே,
உன்தன் மிகுங் கிருபை, ஓ! மிகவும் பெரிதே,
உத்தம மனமுடையோய், என்னை ஆளும்! — எத்

3 ஆயங் கொள்வோன்போல், பாவ ஸ்திரீபோல,
அருகிலிருந்த கள்ளன்போல்,
நேயமாய் உன் சரண் சரண் என வணங்கினேன்;
நீ எனக்காகவே மரித்தனை, பரனே. — எத்

4 கெட்டமகன் போல் துட்டனாய் அலைந்தேன்,
கொடு பஞ்சத்தால் நலிந்தேன்;
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அலனான்;
எனை ரட்சித்திடல் உன்றன் நிமித்தமே, அப்பனே!
—எத்

த. ப.

---

62. (184) மோகனம் சாபுதாளம்

ப. பாவியாகவே வாறேன்; பாவம் போக்கும்
பலியாம் என் யேசுவே, வாறேன்.

1 பாவக்கறை போமோ என் பாடாய்? உன்
பாட்டாலன்றிப்
போவதில்லை என்றே பொல்லாத பாவியே நான்
—பாவி

2 நீவா, உன் பாவம் என்னால் நீங்கும் என்று
சொன்னீரே;
தேவா, உன் வாக்கை நம்பி, சீர்கேடன் நீசனும்
நான்—பாவி

3 பேய்மருள் உலகுடல் பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு போரில் அயர்ச்சியாய் நான்
—பாவி

4 ஜீவ செல்வ ஞான சீல சுகங்கள் அற்றேன்,
தாவென்று வேண்டிய சாவில் சஞ்சரித்த நான்
—பாவி

5 துன்பங்கள் நீக்கி உன்னைத் தூக்கி அணைப்பேன்
என்றீர்;
இன்ப வாக்குத்தத்தத்தை இன்றைக்கே நம்பியே
நான்—பாவி

6 உன்னைச்சேர ஒட்டாமல் ஊன்றிய தடையாவும்
உன்னன்பால் நீங்கி நல் உயிர் அடைந்தோங்கவே
நான்—பாவி

ஏ. வேப்

63. (195) முகாரி. சாபுதாளம்

ப நித்திய கன்மலை எனக்காய்ப்—பிளந்தது,
நேயமாய் மறைந்துய்குவேன், —நித்

1 சுத்த உதிரமும் நீரும் வடிந்தது
தூயன் விலாவினின்று;—அதால்
சுத்தமடைந்து பாவக்குற்றம் நீங்கிச்
சுகமாக வாழ்வேனே. —நித்

2 என்றன் கிரியைகளால் தேவ நீதிக்கு
ஈடு நான் செய்வதில்லை;—தினம்
சிந்துகினுங் கண்ணீர, வதேது செய்கினும்,
தீங்கு நீங்குவதில்லை. —நித்

3 கொண்டுவரக் கையிலொன்றுமில்லை, உன்
குருசுடன்றான் ஒன்றினேன்;—குருதி
கொண்டு கழுவி உடுத்திப் பெலனருள்,
கோவே; அல்லாதுய்ந்திடேன். —நித்

4 ஜீவனிருக்கையில், சாவில் கண்மூடுகையில்,
தெரியாவுலகிற் செல்கையில், —ஒளி
மேவு பத்ராசன மீதுனைக் காண்கையில்
விரைந்துனில் மறைந்துய்குவேன். —நித்

த. ப.

---

64. (196) செஞ்சுருட்டி ஆதிதாளம்

ப நம்பிவந்தேன், மேசையா, நான் நம்பிவந்தேனே
-திவ்ய
சரணம்! சரணம்! சரணம் ஐயா, நான் நம்பிவந்
தேனே.

1 தம்பிரான் ஒருவனே, தம்பமே தருவனே;—வரு
தவிது குமர குரு பரமனுவேலே, நம்பிவந்தேனே.
—நான்

2 நின் பாத தரிசனம் அன்பான கரிசனம்;—நித
நிதசரி தொழுவ திதம் எனவும் உறுதியில் நம்பிவந்
தேனே. —நான்

3 நாதனே, கிருபைகூர்; வேதனே, சிறுமைதீர்;—அதி
நலம் மிகும் உனதிரு திருவடி அருளே நம்பி
வந்தேனே. —நான்

4 பாவியில் பாவியே, கோவியில் கோவியே,—கன
பரிவுடன் அருள்புரி, அகல விடாதே; நம்பி
வந்தேனே. —நான்

5 ஆதி ஓலோலமே, பாதுகா காலமே—உன
தடிமைகள் படு துயர் அவதிகள் மெத்த; நம்பிவந்
தேனே. —நான்

வே. சா.

---

65. (197) சங்கராபரணம் ஆதிதாளம்

ப அடைக்கலம் அடைக்கலமே, ஏசு நாதா, உன்
அடைக்கலம் அடைக்கலமே!

அ திடனற்றுப் பெலனற்றுன் அடியுற்றழும் ஏழைக்-கு
—அடை

1 ஆசையோடு பாவமதில் அலைந்து திரிந்தேனே,
அன்புள்ள பிதா உனை விட்டகன்று பிரிந்தேனே;
மோசமதையேயலால்மற் றொன்றையும் காணுமலே
தோஷமொடு சேர்ந்தனன் துரத்திடாது சேர்த்
தருள்! —அடை

2 சட்டுப்பட்டாக் சாயமதின் கெட்டரணம் போலவே
மட்டுப்பட்டாப் பாவமதில் மயங்கி உறங்கினேன்;
கெட்டவனே போவெனக் கிளத்தினும், நியாயமே
கிட்டிவந்தலறும் ஏழை கெஞ்சுதல் கேளய்யனே!
—அடை.

3 சிந்திய உதிரமதும் ஐந்து திருக்காயமும்
நொந்துருகெனதுமனச் சஞ்சலமகற்றிடும்;
பந்தமிகும் பாவி என்றன் நெஞ்சிடுங்கரத்தினை
எந்தவிதமுந் தள்ளாமல் இரங்கிடு மையனே !

— அடை

4 என்னிடத்தில் வருவோரை எந்தவிதமும் தள்ளேன்,
என்று சொன்ன வாக்கதனில் எனக்கும்
பங்கில்லையோ ?
அன்றுனது பக்கமதில் ஆயிருந்த கள்ளனுக்-(கு)
இன்றுபர தீசிலிருப்பா யென்றுரைத்தா யல்லவோ ?

— அடை

தே. உபா

---

66. (198) ஆனந்தபைரவி ஏகதாளம்.

ப. தேவனே, நான் உமதண்டையில்—இன்னும்
நெருங்கிச்
சேவதே என் ஆவல் பூமியில்.

அ. மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும் ஆவலாய் உம்
மண்டை
சேரவேன் தேவ

1. யாக்கோபைப்போல், போகும்பாதையில்—
பொழுதுபட்டு
இராவில் இருள் வந்து மூடிட,
தூக்கத்தாலநான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும்
என் கனவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா
நல்ல நாதா !—தேவ

2. பரத்துக்கேறும் படிகள் போலவே—என் பாதை
தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே ;
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம்
உமதண்டை
அருமையாய் என்னை யழைக்கும் அன்பின்
ஆதாராகச்செய்யும்.—தேவ

3. நித்திரையினின்று விழித்துக்—காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன் ;
இத்தரையில் உன் தன் வீடாய் என் துயர்க்கல்
நாட்டுவேனே ;
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக்
கிட்டிச் சேர்வேன்.—தேவ

4. ஆனந்தமாம் செட்டை விரித்துப்—பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப்போயினும்,
வான மண்டலங் கடந்து பறந்து மேலே
சென்றிடினும்,
மகிழ்வுறுகாலத்திலும் நான் மருவியும்மைக்கிட டிச்
சேர்வேன்.—தேவ

வே. ச.

---

67. (201) உசேனி. ரூபகதாளம்.

ப. பாதம் ஒன்றே வேண்டும் ;—இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம்— உன்

1 நாதனே, துங்க மெய்—வேதனே, பொங்குநற்
காதலுடன் தூய்ய—தூதர் தொழுஞ் செய்ய— பாத

2 சீறும் புயலினால்—வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல்—நீர்மேல் நடந்த உன்—பாத

3 வீசும் கமழ்கொண்ட—வாசனைத் தைலத்தை
ஆசையுடன்-மரி-பூசிப் பணிந்த பொற்— பாத

4 போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந்-தூக்கி நடந்த நற்— பாத

5 நானிலத்தோர் உயர் வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத்—தானே கொடுத்த உன்— பாத

6 பாதம் அடைந்தவர்க்—காதரவாய்ப்பிர
சாதம் அருள்யேசு—நாதனே, என்றும் உன்— பாத

யாழ்.

---

68 (84) யமுனாகல்யாணி ரூபகதாளம்.

ப. பாதம் வந்தனமே!—வரப்பிர
சாதம் எந்தனமே

1 ஆதரவோடு வேதமே விடுத்தாளும் அற்புதனே
திவ்ய சுதனே கிருபைப்பதனே, சுசிகர— பாதம்

2 பேசுதற்கரிதான ஸ்துத்திய பெருமைக் கோமானே,
மெய்ச் சீமானே, அருள்கோனே, சுசிகர— பாதம்

3 ஞானமாய் நரர்க்கான ஜீவனே நல்கியசீலா,
மனுவேலா, துரைபாலா, சுசிகர— பாதம்

4 தீவினை தொலைத் தாவியே மிகுத்தேவும் இங்கிதமே,
என் ரஞ்சிதமே, நீ சந்ததமே! சுசிகர— பாதம்

5 தாசரை விசுவாசமாய்க் கையில் தாங்குபகாரா,
அதிகாரா, கன தீரா, சுசிகர— பாதம்

ஆ. அ.

---

69 (225) சங்கராபரணம் ஆதிதாளம்

ப. எல்லாம் யேசுவே,—எனக்கெல்லா மேசுவே

அ. தொல்லைமிகும் இவ்வுலகில் துணை யேசுவே —எல்

1 ஆயனும் சகாயனும் நேயனும் உபாயனும்.
நாயனும் எனக்கன்பான ஞானமணவாளனும்,
—எல்

2 தந்தைதாய் இனம் ஜனம் பந்துள்ளோர் சிநேகிதர்,
சந்தோட சகலயோக சம்பூரண பாக்யமும்,—எல்

3 சவலையில் ஆறுதலும், கங்குலில் என் ஜோதியும்,
கஷ்ட நோய்ப் படுக்கையிலே கைகண்ட
அவிழ்தமும்,—எல்

4 போதகப் பிதாவும் என் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியும் என் தோழனும்,
—எல்

5 அணியு மாபரணமும் ஆஸ்தியும் சம்பாத்யமும்,
பிணையாளியும் மீட்பருமென் பிரியமத்தியஸ்தனும்,
—எல்

6 ஆண ஜீவ அப்பமும் ஆவலும் என் காவலும்,
ஞானகீதமும் சதுரும் காட்டமும் கொண்டாட்ட
மும்,—எல்

யே ஞா.

---

70 (217) சாமா சாபுதாளம்

ப. யேசு நேசிக்கிறார்,—யேசு நேசிக்கிறார்;
யேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மாதவமோ!

1 நீசனு பேனைத்தான் யேசு நேசிக்கிறார்,
மாசில்லாத பரன் சுதன் றன் முழு
மனதால் நேசிக்கிறார்.— ஏசு

2 பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நரராமீனரை நேசிக்கிருரென
நவிலல் ஆச்சரியம்.— ஏசு

3 நாதனை மறந்து நாட்கழித் துலைந்தும்,
நீதன் யேசென்னை நேசிக்கிருரெனல்
நித்தம் ஆச்சரியம்.— ஏசு

4 ஆசை யேசுவென்னை அன்பாய் நேசிக்கிருர்:
அதைநினைந்தவர் அன்பின் கரத்துளே
ஆவலாய்ப் பறப்பேன் — ஏசு

5 இராசன் யேசுவின்மேல் இன்பக்கீதம் சொலில்,
ஈசன் யேசென்னைத் தானேசித்தாரென்ற
இணையில் கீதஞ்சொல்வேன்.— ஏசு

ந. மீ

---

71 (219) தேவகாந்தாரி ரூபகதாளம்

ப. தந்தேன் என்னை யேசுவே, இந்த நேரமே உமக்கே.
—தந்

அ உன்தனுக்கு ஊழியஞ்செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும்!— தந்

1 ஜீவகாலம் முழுதும்
தேவபணி செய்திடுவேன்,
பூவில் கடும்போர் புரிகையில்
காவும்! உந்தம் கரத்தினில் வைத்து,— தந்

2 உலகோர் என்னை நெருக்கிட்
டலமாயுத்தம் செய்திடினும்,
நலமாய்ச் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா, வெல்லுவேன்.— தந்

3 உந்தஞ் சித்தமே செய்வேன்,
என்றன் சித்தம் ஒழித்திடுவேன்,
எந்த இடம் எனக்குக் காட்டினும்,
யேசுவே, அங்கே இதோ! போகிறேன்.— தந்

4 கஷ்டம் நஷ்டம் வந்தாலும்,
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்,
அஷ்ட திக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும். !— தந்

5 ஒன்றுமில்லை நான் ஐயா!
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்;
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும்!— தந்

வே. ச.

---

72. (220) சங்கராபாணம் சாபுதாளம்

ப. என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்,
ஏற்றுக்கொள்ளும், யேசுவே.

அ. அன்னை தந்தை யுந்தம் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்தமல்லாது, இப்போது
—என்

1 அந்தகாரத்தி னின்றும், பவப்பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனை மீட்ட
எந்தையே, உன்தனுக் கிதோ! படைக்கிறேன்.
—என்

2 ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீனமாக்கி வைத்தேன்;
பாத்ரமதாய் அதைப் பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன்; கருணை செய்; தேவா. —என்

3 நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு
ஜோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை,—என்

சா. சீ.

73 (239) நாதநாமக்ரியை. சாபுதாளம்.

ப. ஜெப சிந்தை எனில் தாரும் தேவா,—என்னை

அ. அபயமென் றுனக்குக்கை யளித்தேன், பொற்பாதா,
—ஜெப

1 உண்மை மனதோ டுன்னைக் கெஞ்ச,—உல
கெண்ண மெல்லா மகற்றி உரிமையே மிஞ்ச,
தொன்மை ஆயக்காரன் போலஞ்ச,—பாவத்
தோஷமகலத் திருரத்தம் உள்ளிஞ்ச— ஜெப

2 இடைவிடாமல் செய்யும் எண்ணம்—என்
இதயத்தில் உதயமாய் இலங்கிடப் பண்ணும்;
சடமுலகப் பேயை வெல்லவும்—நற்
சாதகமுண்டாகத் தயைசெய் என்னுள்ளம்— ஜெப

3 ஊக்கமுடன் ஜெபம் செய்ய,—தகா
நோக்கமெல்லாம் கெட்டு நொறுங்கியே நைய,
பேய்க்கண மோடுபோர் செய்ய,—நல்
ஆக்கம் எனில் தந்து ஏக்கம் தீர்ந்துய்ய— ஜெப

சா. சீ.

74. (242) பைரவி. சாபுதாளம்.

பல்லவி

ஆ! இன்பக் கால மல்லோ—ஜெபவேளை,
ஆனந்த காலமல்லோ?

அனுபல்லவி

பூவின் கவலைகள் போக்கி என் ஆசையைப்
பொன்னுல காதிபன் முன்னே கொண்டேகிடும்.
—ஆ

1 துன்பம் துயர் நீக்கி,-பொல்லாங்கள்-சோதனைகள் போக்கி
அம்பர வாசிகளோ-டிதயத்தை-இன்ப உறவாக்கி,
கெம்பீரமாகவே தம்பிரான் ஆசனம்
கிட்டி மகிழ்வுடனுற்று வரச் செய்யும்— ஆ

2 ஜீவ ஆறுதல் பெற்று,-பிஸ்காவின்-சிகரமதனில் உற்று,
தேவ நகர் கண்ணுற்றுச்-சடத்தை-ஜகத்தில் எறிந்து விட்டு
ஆவி களிப்புடன் ஆகாயஞ் செல்லவே,
அன்போடு பார்த்து நல் வந்தனஞ் சொல்லுவேன் —ஆ

ம. வே.

---

75. (212) புன்னுகவராளி சாபுதாளம்

ப ஆதியாம் மகா ராசனே,—எந்த வேளையும்
அடியனேடிரும், ஈசனே

அ தீதில்லாச் சருவேசா தேசுறும் பிரகாசா,
பாதகன் யான் மிகு பலவீனன் ஆனதால். —ஆதி

1 பாவி பெலனுல், ஐயனே,—நின்றால் என்னைப்
பகைவர் ஜெயிப்பார், மெய்யனே:
தேவா, துணைநீர் ஐயனே;—சிறியனிடம்
சேர்ந்தே வசியும் துய்யனே,
மேவும் தஞ்சம் எனக்கு வேண்டும், காவலன் நீரே;
சாவு வரையும் என்னைத் தாங்கி அரவணையும்—ஆதி

2 இரக்கம் பொழிய வாருமே,—கிருபையாக,
இறைவா, என்னிடம் சேருமே;
உருக்கம் நிறைந்த நீருமே;—அனவரதம்
உந்தம் அருளைத் தாருமே;
செருக்காய் எம்மீ திகலோரா சேதம் செய்ய நினைக்கும்
திருக்கை அகற்றி என்னில் தினமும் அருள்புரியும்.
—ஆதி

ச. யோ.

76 (216) ஹரிகாம்போதி ஆதிதாளம்

ப தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ,
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே.

அ ஆவலதாய் என்னைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார். —தேவ

1 ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார். —தேவ

2 சா நிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே;
வான பரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும். —தேவ

3 பகைவர்க் கெதிரே ஒருபந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார், —தேவ

4 ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்,
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன். —தேவ

த. யோ.

77. (126) மோகனம் ஏகதாளம்

ப ஒரு மருந்தரும் குருமருந்-(து)
உம்பரத்தில் கண்டேனே,

அ அருள் மருந்துடன் ஆனந்த மருந்து,
ஆதியிற்றானாய் முளைத்த மருந்து,
வரும்வினைகளை மாற்றும் மருந்து,
வறுமையுள்ளோர்க்கே வாய்த்த மருந்து. —ஒரு

1 சிங்கார வனத்தில் செழித்த மருந்து,
ஜீவதரு மீதில் படர்ந்த மருந்து,
மங்கை ஏவை பவம் மாற்றும் மருந்து,
வல்ல சர்ப்ப விஷம் மாய்த்த மருந்து. —ஒரு

2 மோசே முதல் முன்னோர் காணு மருந்து,
மோட்ச மகிமையைக் காட்டும் மருந்து,
தேசத்தோர் பிணியைத் தீர்த்த மருந்து,
தீர்க்கதரிசிகள் செப்பிய மருந்து —ஒரு

3 தீராத குஷ்டத்தைத் தீர்த்த மருந்து,
செவிடு குருடுமை தின்ற மருந்து,
மானு திரித்துவ மான மருந்து,
மனுவாய் உலகினில் வந்த மருந்து. —ஒரு

4 செத்தோர் உயிர்த்தே எழுந்த மருந்து,
ஜீவன் தவறு தருளும் மருந்து,
பத்தரைச்சுத்தி கரித்திடும் மருந்து,
பரம வாழ்வினில் சேர்க்கும் மருந்து. —ஒரு

யோ. யா.

---

(128) சூரியகாந்தம் ரூபகதாளம்

1 விசுவாசியின் காதில் பட, யேசுவென்ற நாமம்
விருப்பாய் அவர் செவியில் தொனி இனிப்பாகுது
பாசம்.

2 பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னுவதுவே ;
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்று மந்தப்
பெயரே—விசு

3 துயரையது நீக்கிக் காயமாற்றிக் குணப்படுத்தும் ;
பயங்கள் யாவும் யேசுவென்றால், பறந்தோடியே
போகும்.—விசு

4 காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்
மாயைகொண்ட நெஞ்சையது மயக்கமின்றி
விடுக்கும்—விசு

5 எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்று நிறைந்
திருக்கும் ;
எல்லா நாளும் மாறாச்செல்வம் யேசுவென்ற
பெயரே.—விசு

6 என்னுண்டவா, என் ஜீவனே, என் மார்க்கமே,
முடிவே,
என்னால் வருந்துதியை நீரே, ஏற்றுக்கொள்ளும்,
தேவே.—விசு

பா.

79 (125) ஹரிகாம்போதி ஆதிதாளம்

1 தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்ய
மதுரமாமே,—அதைத்
தேடியே நாடி ஓடியே வருவாய், தினமும் நீ
மனமே— தே

2 காசினிதனிலே நேசமதாகக்
கஷ்டத்தை உத்தரித்தே,—பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்;
கண்டுணர் நீ மனமே.— தே

3 பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம்,—பின்னும்
நேமியாம் கருணை நிலவரமுண்டு;
நிதம் துதி, என் மனமே— தே

4 காலையில் பனிபோல் மாயமாய்—உலகம்
உபாயமாய் நீங்கிவிடும்,—என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ, மனமே— தே

5 துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவராம நேசரிடம்,—நீயும்
அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத் துனைக்காப்பார்;
ஆசைகொள் நீ மனமே.— தே

6 பூலோகத்தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்றும் நாமம்,—அதைப்
பூண்டுகொண்டால்தான் பொன்னகர் வாழ்வில்
புகுவாய் நீ மனமே— தே

ச. பேர.

80. (229) பியாகு ரூபகதாளம்.

ப. கிஞ்சிதமும், நெஞ்சே, அஞ்சிடாதே ;— நல்ல
கேடகத்தைப் பிடி நீ: விசுவாசக் கேடகத்தைப்பிடி. நீ

அ. வஞ்சனையாகவே பேய் எதிர்த்துன்றனை
வன்னிக் கணைதொடுத் தெய்கின்ற வேளையில்
நெஞ்சில் படாமல் தடுக்க அது நல்ல
நிச்சயமான பரிசை அறிந்து நீ— கிஞ்சித

1 பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்க,
பத்தியில் தெளிக்கவும் —நித்ய
ஜீவனைப் பிடிக்க, லோகத்தை ஜெயிக்கத்,
திறமை அளிக்கவும்,
சாவே, உன் கூர் எங்கே ? பாதாளமே, உன்
ஜயம் எங்கே ? என்று நீர் கூவிக்களிக்கவும்,
தேவன் உகந்துனைத் தான் அங்கீகரிக்கச்
செய்யவுமே அது திவ்ய நல் ஆயுதம் :— கிஞ்சித

2 பண்டையர் அந்தப் பரிசையினால் அல்லோ,
கண்டடைந்தார் பேறு ? – நலல
தொண்டன் ஆபேல் முதலான வைதீகரைத்
தொகுத்து வெவ்வேறு
விண்டுரைக்கில் பெருகும் : தீ அணைத்ததும்,
வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்,
கண்டிதமாய் வெற்றி கொண்டது மாம்பல
காரியங்களையும் பார்; இது மா ஜெயம்.— கிஞ்சித

3 ஊற்றமுடன் இப்பரிசை பிடித்திட
உன் செயல் மாபேதம் :— அதன்
தோற்றமும் முடிவும ஏசுபரன் செயல்,
துணை அவர் பாதம் ;
ஏற்றா வணக்கவே பணிவாக
இரந்து மன்றாடி அவர் மூலமாகவே,
ஆற்றல் செய் தேற்றரவாளி பரிசுத்த
ஆவி உதவியை மேவி, அடைந்து நீ— கிஞ்சித

யோ. பா.

81. (251) கமாஸ் ஆதிதாளம்

ப. அன்பே பிரதானம்,—சகோதர
அன்பே பிரதானம்

1 பண்புறு ஞானம், பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம், இவைகளிலெல்லாம்,— அன்

2 பலபல பாஷை படித்தறிந்தாலும்,
கலகல வென்னும் கைமணியாமே.— அன்

3 என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்,
அன்பிலையானல் அதிற்பயனில்லை.— அன்

4 துணிவுட னுடலைச் சுடக்கொடுத்தாலும்,
பணிய அன்பில்லால் பயனதிலில்லை— அன்

5 சாந்தமும் தயவும் சகல நற்குணமும்,
போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள.— அன்

6 புகழிறு மாப்பு பொழிவு பொருமை,
பகைய நியாயப் பாவமும் செய்யா.— அன்

7 சினமடையாது, தீங்கு முன்னுது,
தினமழியாது, தீமை செய்யாது.— அன்

8 சகலமும் தாங்கும், சகலமும் நம்பும்,
மிகைபட வென்றும் மேன்மை பெற்றேங்கும்.—
அன்

ச. பே. ஞா.

---

82. (258) குறிஞ்சி. திஸ்ர ஏகதாளம்.

1 சகோதரர்களொருமித்துச் சஞ்சரிப்பதோ எத்தனை
மகா நலமும் இன்பமும் வாழ்த்தல் செயலா
யிருக்குமே.

2 ஆரோன் சிரசில் வார்த்த நல் அபிஷேகத்தின்
தைலந்தான்
ஊறித் தாடியில் அங்கியில் ஒழுகு மானந்தம்
போலவே.

3 எர்மோன் மலையின்பேரிலும் இசைந்த சீயோன் மலையிலும்
சேர்மானமாய்ப் பெய்கின்ற திவலைப் பனியைப் போலவே.

4 தேசம் மார்க்கம் இரண்டிற்கும் சேனை யெகோவா தருகிற
ஆசீர்வாதம் சீவனும் அங்கே என்று முள்ளதே.

ஆ. ச. பி.

---

83. (253) உசேனி. ரூபகதாளம்.

ப. நித்தம் முயல் மனமே!—பரி
சுத்த ஜீவியத்தில் மெத்த வளர நீ நித்

1 அத்தன் யேசுவினில் பத்தியாய் அமர்ந்து
சத்திய வேதத்தால் நித்தம் உன்னைப் போஷி!— நித்

2 அல்பகல் யேசுவோ டதிக நேரத்தை
ஆசையாய்க் கழி நீ, அவரைப்போலாவாய்— நித்

3 தேவன்றன் பிள்ளைகள் யாவரையும் நேசி,
ஆவலாய் எளியோர்க் கன்பாலுதவி செய்— நித்

4 யேசுவே உன்றனை என்றும் நடத்துவார்;
இன்ப துன்பத்திலும் அன்பாய் நீ பின்செல்லு— நித்

5 எந்த எண்ணத்தையும் யேசுவின் கீழ் ஆக்கி,
உன்றன் உள்ளத்தில் அமர்ந்திரு சாந்தமாய்.— நித்

6 மேவும் அன்பினுக்குள் தேவாவி நடத்த,
மேலான வாழ்வுக்குத் தக்கவனாகுவாய்.— நித்

வே. ச.

---

84. (215) செஞ்சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

வேத புத்தகமே, வேத புத்தகமே,
வேத புத்தகமே, விலை பெற்ற செல்வம் நீயே.

சரணங்கள்

1 பேதைகளின் ஞானமே,—பெரிய திரவியமே,
பாதைக்கு நல்தீபமே,—பாக்கியர் விரும்புந் தேனே!
—வேத

2 என்னை எனக்குக் காட்டி—என் நிலைமையை மாற்றிப்,
பொன்னுலகத்தைக் காட்டிப்—போகும் வழி
சொல்வாயே, —வேத

3 துன்பகால ஆறுதல்—உன்னால் வரும் நிசமே
இன்பமாகுஞ் சாவென்றாய்—என்றும் நம்பின
பேர்க்கே—வேத.

4 பன்னிரு மாதங்களும்—பறித்துண்ணலாம் உன்கனி;
உன்னைத் தியானிப்பவர்—உயர்கதி சேர்ந்திடுவார்.
—வேத

அ. பி.

---

85. (246) மோகனம் ஏகதாளம்

ப பாதைக்குத் தீபமாமே
பரிசுத்த ஆகமம்-மா நல்ல

1 பாதைக்குத் தீபமே, பாவிக்கு லாபமே
பேதைக்குத் திரவியமே, பரிசுத்த ஆகமம்.
—மா நல்ல

2 தேனின் மதுரமே, திவ்ய அமுதமே
வான பிதாவின் வாக்கே பரிசுத்த ஆகமம்.
—மா நல்ல

3 நீதியினுதாரமே நெறியுள்ளோர் செல்வமே.
ஜாதிகள் மேன்மையாமே பரிசுத்த ஆகமம்
—மா நல்ல

4 ஞான சமுத்திரமே, நல்ல சுமுத்திரையே,
ஈனர்க்கு ஆதரவே பரிசுத்த ஆகமம் —மா நல்ல

5 உலகோர்க் குயிர்த்துணே, உண்டோ அதற்கிணே ?
அலகையை வெல்லுங்கணே பரிசுத்த ஆகமம்
—மா நல்ல

6 எல்லேயில்லா விஸ்தாரம், எவர்க்கும் பர மாகாரம்.
வல்ல பரனின் வேதம் பரிசுத்த ஆகமம் —மா நல்ல

தா அ

---

86. (273) பியாகு ரூபகதாளம்

ப ஆண்டவர் பங்காகவே, தசம பாகம்,
அன்பர்களே, தாரும்;—அதால் வரும்
இன்பந்தனேப் பாரும்.

அ வான் பல கணிகளேத் திறந்தாசீர்
வாதங்கள் இடங்கொள்ளாமற் போகுமட்டும்
நான் தருவேன் பரி சோதியுங்களென்று
ராஜாதி ராஜ சம்பூரணர் சொல்வதால், —ஆண்

1 வேதாளராஜன் அருஞ்சிறை மீட்டாளும்
விண்ணவர் கோமானே—அந்த
மேதகத்தை நன்றி ஞாபகஞ் செய திட
விதிதத்து தானே
வேதனம், வியாபாரம், காலி பறவையில்,
வேளாண்மை, கைத்தொழில், வேறுவழிகளில்,
ஊதியமாகும், எதிலும் அவர் பாகம்
உத்தமமாகப் பிரதிஷ்டை பண்ணியே, —ஆண்

2 ஆலயங் கட்ட அருச்சனை செய்ய,
அதற்குளதைப் பேண—தேவ
ஊழியரைத் தாங்கி உன்னத போதனை
ஓதும் நன்மைகள் காண,
ஏழைகள், கைம்மைகள், அனாதப் பாலர்கள்,
ஏது கரமற்ற ஊனர், பிணியாளர்,
சாலவறிவு நாகரிக மற்றவர்
தக்க துணைபெற்றுத் துக்கமகன்றிட, —ஆண்

3 நம்மைப் படைத்துச் சுகம் பெலன் செல்வங்கள்
யாவும் நமக்கீந்து,—நல்ல
இம்மானுவே லென்றொரு மகனைத் தந்து
இவ்வா றன்புகூர்ந்து.
நன்மைபுரிந்த பிதாவைக் கனம் பண்ண
நம்மையும் நம்முடை யாவையு மீந்தாலும்
சம்மதமே அதிலும் தசம பாகம்
தாவென்று கேட்கிறார்; மாவிந்தை யல்லவோ?
—ஆண்

ஐ. சா. வே.

---

87. (276) முகாரி. ஆதிதாளம்.

ப. காணிக்கை தருவாயே—கர்த்தற்குன து
காணிக்கை தருவாயே.

அ காணிக்கை தா உனக்காய்ப் பாணி, குருதிசிந்தி
மாண ரட்சிப்பினை நீ காணும்படி செய்ததால்,—கா

1 பத்தில் ஒரு பங்குதானோ?— பத்தினில் கட்டுப்
பட்ட யூதருக்கல்லவோ?
அத்தன் உனக்களித்த அளவை உட்கார்ந்து பார்த்
தால்
பத்தில் ஒரு பங்கல்ல பலமடங்காகிடாதோ?— கா

2 உன்றனுடல் உன் சொந்தமோ?—அதைவிடினும்
உன் மனம் ஆவி சொந்தமோ?
அன்னவன் உடையதென் றறிந்து உணர்வாயானால்
உன்னையும் உன்னுடைய உடைமையுமல்லோ
ஈவாய்?—கா

3 தேவ வசனம் பரப்ப,—அதனுக்கென்று
செல்லும் செலவை நிரப்ப,
ஆவலாய் யேசுவுக்கே ஆராதனை நடத்தும்
தேவ ஊழியத்துக்கும் திறந்த மனதுடனே,— கா

4 பயிர் பலன் மூலமாகவும்,—இன்னும் பலர்க்குப்
பணம் முதலானதாகவும்,
உயிர்ப் பிராணியாகவும் உதவும் கடவுளுக்கே
உயிரைப் படைப்பாயோ உடைமையைக் கொடா
விடில்?—கா

ல. போ.

---

88. (286) உசேனி. ரூபகதாளம்

ப. தந்தானைத் துதிப்போமே;—திருச்
சபையாரே, கவி—பாடிப்பாடி.

அ. விந்தையாய நமக்கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர் நன்மை மிகமிகத்— தந்

1 ஒய்யாரத்துச் சீயோனே,—நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித்துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும்.—தந்

2 கண்ணாரக் களித்தாயே, நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து;
எண்ணுக் கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனாமாரிபோற் பெய்துமே—தந்

3 சுத்தாங்கத்து நற்சபையே,—உனை
பூற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்ருக்குலந்துனைச் சத்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம்— தந்

4 தூரம் திரிந்த சீயோனே,—உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி,
ஆரங்கள் பூட்டியலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை!— தந்

5 சிங்காரக் கன்னிமாரே,—உம்
அலங்காரக்கும்மி யடித்துப் படித்து,
மங்காத உன்மணவாளன் யேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும்.— தந்

வே. மா.

---

89 (267) சங்கராபரணம். ஏகதாளம்

ப. தாசரே, இத்தாரணியை அன்பாய்
யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்.

அ. நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்
காணபிப்போம், மாவிருள் நீக்குவோம்,
வெளிச்சம் வீசுவோம்.— தாச

1 வருத்தப்பட்டுப் பாரஞ் சுமந்தோரை,
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,
உரிததாய் யேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து
தீர்த்தாரே— தாச

2 பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,
யேசு கனிந்து திரிந்தனரே— தாச

3 நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை,
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்கவொண்ணாக் கஷ்டத்துக்குள்,
நிஷ்டூரத்துக்குள, படுகுழிக்குள் விழுந்தனரே—தாச

4 இந்து தேச மாது சிரோமணிகள்
வித்தையொளிக்குள் வரவழைப்போம்;
சுந்தரக் குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து,
நிர்ப்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட;— தாச

5 மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்;
ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்,
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம்.—
தாச

வே. ச.

---

90 (269) பியாகு ரூபகதாளம்

ப. ஆத்தும ஆதாயம் செய்குவோமே,—இது
ஆண்டவர்க்குப் பிரியம்;—நாமதனால்—
ஆசீர்வாதம் பெறுவோம்.

அ. சாத்திரம் யாவும் தெரிந்த கிறிஸ்தையன்
தஞ்சத்தைப் பெற்று நாமிந்த மாவேலையில்
ஆத்திரமாக முயற்சி செய்வோமாகில்
அற்புதமான பலனையடையலாம்.— ஆத்

1 பாழுலகு முழுதையும் ஒருவன் சம்
பாதித்துக்கொண்டாலும்,—ஒரு
நாளுமழியாத ஆத்துமத்தை அவன்
நஷ்டப்படுத்திவிட்டால,
ஆளுத்துரையவனுயிருந்தாலுமே,
அத்தால் அவனுக்கு இலாபமில்லை யென்று,
ஏழை ரூபங்கொண்டு ஞாலமதில் வந்த
எம்பெருமான் கிறிஸ்தேசன்று சொன்னாரே.— ஆத்

2 கெட்டுப்போன ஆத்துமாக்களை ரட்சிக்க
மட்டில்லாத் தேவசுதன்—வானை
விட்டுலகில் கனபாடு பட்டு ஜீவன்
விட்டதும் விந்தை தானே :
துட்டையொருத்தியினாத்துமத்தை மீட்கத்
தூயபரன் முன்னோ கிணற்றருகிலே
இட்டமுடன் செய்த இரட்சண்ய வேலையை
இந்த நிமிஷமே சிந்தையிலெண்ணியே,— ஆத்

யே. ஞா.

---

91. (272) பியாகு. ஆதிதாளம்

1 வீராதி வீரர் யேசு சேனை நாங்கள்,
சேனை நாங்கள், யேசுவின் சேனை நாங்கள்.

2 திருவசனத்தையெங்கும் திரிந்து சொல்வோம்,
திரிந்து சொல்வோம், அதை அறிந்து சொல்வோம்

3 அறிவீன மென்னும் காட்டை அதமாக்குவோம்,
அதமாக்குவோம், ஞான மதால் தாக்குவோம்.

4 சிலுவைக் கொடியைச் சேரத் தேடிப்பிடிப்போம்,
தேடிப்பிடிப்போம் ; அன்பு கூறிப் பிடிப்போம.

5 இரட்சணியச் சீராவுடன் நீதிக் கவசம்,
நீதிக் கவசம் கை யாடுவோம் வசம்

6 விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்,
மேலுயர்த்துவோம், அதை மேலுயர்த்துவோம்.

7 பாவச் சோதனைத் தடைகள் பாசம் நீக்குவோம்,
பாசம் நீக்குவோம் ஆசா பாசம் போக்குவோம்.

சா. சீ.

 (186) கல்யாணி. சாபுதாளம்.

பல்லவி

என்னையும் உம தாட்டின் மந்தையோ
டேற்றுக் காத்திடும், யேசுவே!

சரணங்கள்

1 வன்னியான தோர் அலகைப் பேய் தனை
வதைத்திட ஞானப் பெலத்துடன் சிறந்-து
இந்நிலத்தினில் வந்துதித்த நல்
ஏசுவே, எனைச் சேர்த்திடும்!— என்னை

2 ஐயிருபது ஆட்டினில் ஒன்று
அகன்றிட, மனம் உகந்து கோன்—அதை
மெய்யதாகவே தேடுவான் என்ற
மேய்ப்பரே, எனைச் சேர்த்திடும்!— என்னை

3 வாசலாகவே இருக்கிறேன், எனுல்
வந்தவன் மனம் நொந்திடான்,—வெகு
நேசமாகவே வாழ்வான், என்ற நல்
நிமலனே, எனைச் சேர்த்திடும்!— என்னை

4 நல்ல மேய்ப்பன் நான், என மொழிந்த என்
நாதனே, ஞான போதனே, ஜீவ
புல்லுள்ள ஸ்தலந் தன்னில் கொண்டெனைப்
போஷித்து முசுப்பாற்றிடும்!— என்னை

5 மேய்ப்பராகவே இருக்கிறீர்; எந்தம்
மேய்ச்சலும் நீர் தாமலோ! ஞான
வாய்ப்புள்ள சத்ய மறையில் மேய்ந்து நான்
வளர்ந்திட அருள் புரிந்திடும்!— என்னை

6 அன்புடைய மெய் மேய்ப்பராயிருந்-து
ஆட்டுக்காய்ச் சொந்த ஜீவனை வெகு
இன்பமாகவே ஈந்து மீட்ட நல்
ஏசுவே, எனைச் சேர்த்திடும்!— என்னை

———

மரி. உப.

93. (300) பிலஹரி ரூபகதாளம்

ப. இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும்,
கர்த்தாவே.

அ. உந்தம் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய்
வந்த—இந்த

1 பிள்ளைகள் எனக் கதிகப் பிரியம், வரலாம், என்று
உள்ளமுருகிச் சொன்ன உத்தம சத்தியனே;—இந்த

2 பாலரைக் கையில் ஏந்திப் பண்பாய் ஆசீர்வதித்த
சீலமாயின்றும் வந்தாசீர்வாதம் செய்யும், ஐயா,—
இந்த

3 உமக்கூழியம் செய்யவு, உம்மைச் சிநேகிக்கவும்,
உமது ஆவியைத் தந்து உம்முட மந்தை சேர்த்து,
—இந்த

4 உலகமும் பேய் பிசாசும் ஒன்றும் தீது செய்யாமல்,
நலமாய் இதைக் காததாளும் நன்மைப் பராபரனே!
—இந்த

5 விசுவாசத் தோடிதுந்தன் மேய்ப்புக்கும்
உள்ளடங்கிப், பசிய மரம்போல் தெய்வ பத்திபிலே
வளர.—இந்த

பே. தா.

---

94. (310) பிலஹரி ரூபகதாளம்

ப. அருமை ரட்சகா, கூடிவந்தோம்;—உம
தன்பின் விருந்தருந்த வந்தோம்.

அ. அறிவுக் கெட்டாத ஆச்சரியமான
அன்பை நினைக்க,— அரு

1 ஆராயும் எமதுள்ளங்களை,—பல
வாறான நோக்கம் எண்ணங்களைச்
சீராய்ச் சுத்தமனதா யுட்கொள்ள நீர்
திருவருள் கூறும்— அரு

2 ஜீவ அப்பமும் பானமும் நீர்,—எங்கள்
தேவையாவும் திருப்தி செய்விர் ;
கோவே ! மா பயபக்தியாய் விருந்து
கொண்டாட இப்போ.— தரு

3 உமதன்பின் பிரசன்னம் பெற்றோம் ;—உமது
ஒளி முகதரிசன முற்றோம் ;
சமாதானம், அன்பு, சந்தோஷமும் எமில்
தங்கச் செய்திடும்.— அரு

4 கிருபை விருந்தின் இந்த ஐக்யம்—பூவில்
கிடைத் தற்கரிய பெரும் பாக்யம் ;
அரும் பிரியத்தோ டெங்களை நேசிக்கும்
குருவே, வந்தனம் !— அரு

5 எங்கட்கா யுமை ஒப்புவித்தீர் ;—கொடும்
ஈனச் சிலுவையில் மரித்தீர்
பொங்கும் பேரன்பை எங்கும் தெரிவிப்போம் ;
புண்ய நாதரே !—

6 பந்திக் கெஜமான் நீர் யேசுவே !—எமைச்
சொந்தமாய் வரவழைத்தீரே ;—
உந்தம் கிருபை வல்லமை பெற்றுமக்
கூழியஞ் செய்ய,— அரு

வே. ச.

95. (311) தேவகாந்தாரி ஆதிதாளம்

ப. அன்பரின் நேசம் ஆர்சொல்லலாகும் ? அதிசய
அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும் ?

அ. துன்ப அகோரம் தொடர்ந்திடும் நேரம்— அதி

1 இதுவென் சரீரம், இது வென் தன் ரத்தம்,
எனை நினைத்திடும்படி அருந்துமென்றாரே.— அதி

2 பிரிந்திடும் வேளை நெருங்கினதாலே
வருந்தின சீஷர்க்காய் மறுகி நின்றாரே.— அதி

3 வியாழனிரவினில் வியாகுலத்தோடே
விளம்பின போதகம் மறந்திடலாமோ? அதி

4 செடியும் கொடியும்போல் சேர்ந்து தம்மோடே
முடிவு பரியந்தம் நிலைப்பீர் என்றாரே.— அதி

5 பக்தர்கட்காகப் பரமனை நோக்கி
மெத்தவும் ஊக்கமாய் வேண்டிக்கொண்டாரே.—
அதி

சா. ப.

---

96. (359) பிலஹரி ஆதிதாளம்

ப. ஆனந்தமே! ஜெயா! ஜெயா!
அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்.

அ. ஞானரட்சகர், நாதர் நமை—இந்த
நாள்வரை ஞாலமதனில் காத்தார்.— புகழ்!

1 தங்கு கனம், வளர் செங்கோலரசிவை
தளரா துள கிறிஸ்தானவராம்,
எங்கள் ரட்சகரேசு நமை—வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால்,— புகழ்!

2 மூந்து வருட மதனில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலேயுழல,
தந்து நமக்குயிருடையுணவும்—வெகு
தயவுடன் யேசு தற்காத்ததனால்,— புகழ்!

3 பஞ்சம் பசிக்கும் பட்டயத்துக்கும் வெகு கொடும்
பாழ் கொள்ளை நோய் விஷதோஷத்திற்கும்
தஞ்சரட்சகர் தவிர்த்து நமை—இத்
தரை தீனில் குறை தணித்தாற்றியதால்.— புகழ்!

வே. மா.

---

97. (363) ஆனந்தபைரவி ஆதிதாளம்

ப. இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத்திரிப்போமாக.

அ. நம்மை ரட்சிக்க வந்து தம்மைப் பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும் அற்புதமாகவும்,— இம்

1 காலம் சொல் போல் கழியும்; தண்ணீரைப் போல்
வடியும்;
கனவைப் போலேயும், ஒழியும்:
வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்,
மண்ணின் வாழ்வொன்றும் நிற்கமாட்டாது,
கோலப்பதுமைக்கும், நீர்க் குமிழிக்கும், புகைக்குமே
கொண்ட உலகததில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன்,— இம்

2 பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்,
பரம பாதையைத் தொடர்ந்தோம்;
வலிய தீமையை வென்றோம, நலியும் ஆசையைக்
கொன்றோம்,
வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி என்றதெல்லாம் விண்டோம், கர்த்தாவின்
மீட்பைச கண்டோம்;
காய்ந்த மனதொடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்து கெடவும், ஆராய்நது நெறியுடன்,— இம்

3 சனசேதம் வருவிக்கும் கேடுகட்கோர் முடிவு
தந்து, நொறுங்கினதைக் கட்டிக
கன சபையை ஆதரித் தன்பாய் ஆசீர்வதித்துக்
கண்ணோக்கி எல்லார் மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து தமது தேவ
சிந்தையினோடே தி விந்தையதாய் உயிர்
மைந்தனால் எங்களை இந்த விநோதமாய்.— இம்

வே. சா.

98 (293) சங்கராபரணம் ஏகதாளம்

ப. வாரும் நாம் எல்லாரும் கூடி,
மகிழ் கொண்டாடுவோம்:—சற்றும்
மாசிலா நம் யேசுநாதரை வாழ்த்திப் பாடுவோம் ஆ!

1 தாரகம் அற்ற ஏழைகள் தழைக்க நாயினர்—இந்தத்
தாரணியிலேமனுடவ தாரம் ஆயினர்;— ஆ!

2 மா பதவியை யிழந்து வறியர் ஆன நாம்—அங்கே
மாட்சி உற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினர்—ஆ!

3 ஞாலமதில் அவர்க்கிணை நண்பர் யாருளர்?—பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம்உயிர் விட்டார்;—ஆ!

4 மா கொடிய சாவதின் வலிமை நீக்கியே,—இந்த
மண்டலத்தினின்றுயிர்த்தவர் விண்டலஞ் சென்றார்.
—ஆ!

5 பாவிகட் காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே,—
அவர்
பட்சம் வைத் துறும் தொழும்பரை இரட்சை
செய்கிறார்—ஆ!

யோ. பா.

---

99. (295) மோகனம் சாபுதாளம்

ப தருணம் இதுவே, கிருபை கூரும்,
விழி பாரும், பதம் தாரும், தாரும்

1 கருணைத் தெய்வ குமாரா, கன மனுடவதாரா
அருமை இரட்சக யேசு நாதா—உல
கனைத்தும் வணங்கும் சத்ய வேதா,—உன் றன்
அடியார்க் கருளும் திருப் பாதா, சத்ப்ர
சாதா, நீதா! —தரு

2 வானத்திருந்து வந்த ஞானத்தொளி சிறந்த
மகிமைப் பிதாவின் திருப் பாலா,—ஆதி
மைந்தர்க் கிரங்கும் அனுகூலா,—கன
விந்தைக் கருணை மனுவேலா,—மெய்ந்
நூலா, சீலா! —தரு

3 அற்ப உலக வாழ்வில் அலைந்து, நிலை குலைந்து,
அலகைப் படுகுழியில் வீழ்ந்து,—தாழ்ந்து,
அஞ்சி, அஞ்சி நலிந்தேனே;—அடிமைக்
கஞ்சல் என்று சொல்லும் கோனே,—தீ
மானே, தானே! —தரு

4 இந்த உலகத் தெமைச் சந்தித் தனுக்கிரகித்த
சொந்தக் கிருபைகள் மா காத்ரம்,—அவை
சிந்தித்து முடியா விச்சேத்ரம்—நிர்ப்
பந்த அடியார்கள் எம் மாத்ரம்!—பத
தோத்ரம்! தோத்ரம்! —தரு

வே. சா.

---

100 (296) நாதநாமக்கிரியை சாபுதாளம்

ப சரணம் நம்பினேன் யேசு நாதா—இது

அ தருணம், தருணம், உன்றன் கருணைகூர், வேதா, —சர

1 நின் அருளால் இங்கே வந்து,—என்றும்
நின் அடைக்கலமாக என்னையே தந்து,
முன் நாள் வினையைத் துறந்து—ஆதி
மூலமே, உனக் கோலம், ரட்சியும் என்று —சர

2 சன்னதி முன் தொண்டன் நின்றே,—என்றும்
தாயான கருணை உனக்கு உண்டென்றே,
சென்னிமேல் கரம் தூக்கி நின்றே,—உனைச்
சேவிக்கும் எளியேனைக் கோபிக்காய் என்றே —சர

3 அலைவாய்த் துரும்பு போல் ஆடி,—உன
தெதி கருணை வரச் செம்பாதந் தேடித்
தொலையாத வாழ்வை மன்றாடி,—அன்பின்
தோத்ர சங்கீர்த்தன கீதங்கள் பாடி, —சர

4 இனிய கருணை பொழிவேதா —எனை
இரு கரத்தால் அணை எம்கிறிஸ்து நாதா;
கனி வினை நீக்கிய நீதா,—நசரைக்
கர்த்தாதி கர்த்தா உன் கருணையைத் தா தா; —சர

ச. பி.

---

101 (329) மோகனம் சாபுதாளம்

ப காலமே தேவனை த தேடு;—ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு.

அ சீலமுடன் பதம் பாடிக்கொண்டாடு;
சீரான நித்திய ஜீவனை நாடு. —கால

1 மன்னுயிர்க்காய் மரித்தாரே;—மனு
மைந்தனென்ன நாமம் வைத்திருந்தாரே;
உன் சிருட்டிகரை நீ உதயத்திலெண்ணு;
உள்ளங்கனிந்து தனிஜெபம் பண்ணு. —கால

2 பாவச் சோதனைகளை வெல்லு;—கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு,
ஜீவகிரீடம் சிரத்திலணியச்
சிந்தனை செய்; மனுவேலனைப் பணிய. —கால

3 சிறுவர்கள் என்னிடஞ் சேரத்—தடை
செய்யா திருங்கள் என்றார் மனதார;
பரலோகச் செல்வ மவர்க்குப் பலிக்கும்;
பாக்கிய மெல்லாம் பரந்து ஜொலிக்கும். —கால

4 வேலையுனக்குக் கைகூட—சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாட,
காலை தேடுவோர் எனைக் கண்டடைவாரே,
கண் விழித்து ஜெபஞ் செப்யும் என்றாரே. —கால

ச. ப. ஞா.

பல்லவி

இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய், இயேசுநாதையா,
இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்.

அனு பல்லவி

அன்றுன் உதிரம் நரர்க்கென்று சிந்தி மீட்டெனை
வென்றியுடன் ரட்சித்த நன்றி போலே எனக்கு—இன்

சரணங்கள்

1 போன ராவில் என்னைக் கண் பார்த்தாய்,
—பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தாய்;
ஈன சாத்தான் எனையே இடர்க்குள் அகப்படுத்தி,
ஊனம் எனக்குச் செய்யா திருக்கமுடன புரந்தாய்.
—இன்

2 கையிட்டுச் கொள்ளும் என்றன் வேலை—யாவிலு
முன்றன்
கடைக்கண் ணோக்கி, அவற்றின் மேலே,
ஐயா, நின் ஆசீர்வாதம் அருளி என் மனோவாக்கு
மெய்யால் நின் மகிமையே விளங்கும் படி ஒழுக,
—இன்

3 எத்தனையோ விபத்தோர் நாளே ;— தஞ்சம் நீ என
எளியேன் அடைந்தேன் உன்றன் தாளே :
பக்தர் பாலனு, எனைப் பணபாய் ஒப்புவித்தேன், உன்
சித்தம் எனது பாக்யம், தேவ திருக்குமாரா, —இன்

4 பாவச் சோதனைகளை வென்று, பேயுலகுடல்
பண்ணும் போர்களுக் கெதிர் நின்று,
ஜீவ பாதையில் இன்றும் திடனாய் முன்னிட்டுச்
செல்ல,
தேவ சர்வாயுதத்தைச் சிறக்க எனக்கணிந்து —இன்

பா.

103 (330) *சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1 ஐயனே ! உமது திருவடிகளுக்கே
ஆயிரந்தரம் தோத்திரம் !
மெய்யனே உமது தயைகளை அடியேன்
விவரிக்க எம்மாத்திரம்.

2 சென்றதாம் இரவில் தேவரீரென்னைச்
சேர்த்தரவணைத்தீரே ;
அந்தடவாயிப் பகலிலும் கிருபை
யாகவா தரிப்பீரே.

3 இருதயந்தனை நீர் புதியதே யாக்கும் !
ஏழையைக் குணமாக்கும் !
கருணையாய் என்னை உமதகமாக்கிக்
கன்மமெல்லாம் போக்கும்.

4 நாவிழி செவியை, நாதனே இந்த
நாளெல்லாம் நீர் காவும்
தீவினை விலகிநான் திருமுகம் நோக்க,
தெய்வமே, இங்குமேவும்.

5 கைகாலால் நான் பவம் புரியாமல்
கர்த்தனே துணை நில்லும்
தூய்யனே, உம்மால் தான் எனதிதயம்
தூய்வழியே செல்லும.

ஞா. சா.

---

104 (339)

தன்யாசி *ஆதிதாளம்*

ப. வினை சூழா திந்த இரவினில் காத்தாள்,
விமலா, கிறிஸ்து நாதா

அ. கனகாபி ஷேகனே, அவனியர்க் கொளிர், பிர
காசனே, பவ நாசனே, ஸ்வாமி !— வினை

சரணங்கள்

1 சென்ற பகல் முழுதும் என்னைக் கண் பார்த்தாய்;
செய் கருமங்களில் கருணைகள் பூத்தாய்;
பொன்ரூ தாத்ம சரீரம் பிழைகக ஊண் பார்த்தாய்;
பொலலாப் பேயின் மோசம் நின்றெனைக் காத்தாய்.
—வினை

2 சூரியன் அஸ்தமித் தோடிச் சென்றானே;
ஜோதிநட். சத்திரம் எழுந்தன வானே;
சேரும் விலங்கு பட்சி உறைபதி தானே
சென்றன; அடியேனும் பள்ளி கொள்வேனே.—வினை

3 ஜீவன் தந்தெனை மீட்டோய் சிறியேன் உன் சொந்தம்
ஜெகத் தின்பங்கள் விழைந்து சேர்தல் நிர்ப்பந்தம்;
பாவியேன் தொழுதேன் நின் பாதார விந்தம்;
பட்சம் தைத்தாள்வையேல், அதுவே ஆனந்தம்.
—வினை

4 இன்றைப் பொழுதில் நான் செய் பாவங்கள் தீராய்;
இடர்கள் துன்பங்கள் நீங்க என்னைக் கை சேராய்
உன்றன் அடிமைக் கென்றும் உவந்தருள் கூராய்;
உயிர்ர எடுப்பையேல், உன் முத்தி தாராய்.— வினை

பா.

---

105 (337) சங்கராபரணம் ஏகதாளம்

கண்ணிகள்

1 ஐயரே, நீர் தங்கும் என்னிடம்
ஐயரே, நீர் தங்கும் !-இப்போது
அந்திநேரம் பொழு தஸ்தமித்தாச்சே,
ஐயா, நீர் இரங்கும்

2 பகல்முழுதுங் காத்தீர், சென்ற
பகல்முழுதுங் காத்தீர் ;-தோத்திரம் !
பரமனே, இந்த இரவிலும் வாரும் !
பாவியை நீர் காவும் !

3 தங்கா தொருபொருளும் என்னிடம்,
தங்கா தொருபொருளும் :- இயேசு
தற்பரனே, நீர் ஒருவரேயென்னில்
தங்கித் தயைபுரியும்!

4 உயிரே துணையின்றிப் பாவிக்
குயிரேதுணையின்றி?—என்தன்
உடல் உயிர் உம்மால் உய்கிறதையா!
உத்தமனே, தங்கும்

5 நீர் தங்கிடும் வீட்டில், இயேசுவே
நீர் தங்கிடும் வீட்டில்-எல்லாம்
நிறைவே குறைவுண்டாமோ கர்த்தா?
நின்னை விடமாட்டேன்.

ஞா. சா.

106 (202) சங்கராபரணம் ஆதிதாளம்

1 வாரும் ஐயா, போதகரே,
வந்தெம்மிடம் தங்கியிரும்:
சேரும் ஐயா பந்தியினில்,
சிறியவராம் எங்களிடம்.

2 ஒளிமங்கி இருளாச்சே,
உத்தமரே, வாரும் ஐயா!
கழித்திரவு காத்திருப்போம்,
காவலனே கருணை செய்வீர்

3 நான் இருப்பேன், நடுவில் என்றீர்,
நாயன் உன் நாமம் நமஸ்கரிக்க,
தாமதமேன் தயைபுரிய
தற்பரனே, நலம் தருவீர்.

4 உந்தம்மனை திருச்சபையை
உலக மெங்கும் வளர்த்திடுவீர்.
பந்தமறப் பரிகரித்தே
பாக்யம் அளித் தாண்டருள்வீர்.

வே. பா.

107 (345) கேதாரகௌளம் ஆதிதாளம்

ப. யேசுநாயகா தந்தாளும் :—எந்நாளும், திவ்ய
யேசுநாயகா, வந்தாளும்.

அ. ஆசீர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக—யேசு

ச. 1 சுந்தரம் மிகும்படி முன் அந்த மண வீட்டில்
உந்தம் அருள் தந்த தயைபோலே, அன்பாலே.
—யேசு

2 உத்தம சன்மார்க்க நெறி, பக்தி, விசுவாசம்,
நித்திய சமாதானம் உற்று வாழ, மிகவாழ,— யேசு

3 துங்கம் மிகு நன் கனம் விளங்கி, வளமாக
மங்களமதோங்க, நலம் தாங்க, நலம் தாங்க,—யேசு

4 நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகிப்
புத்திர சந்தானமே செழிக்கத் தழைக்க— யேசு.

வே சா.

---

108 (343) கமாஸ் (மாத்தாட) அடதாளம

பல்லவி

நிச்சயம் செய்குவோம் வாரீர்,—வதுவரர்க்கு
நிச்சயம் செய்குவோம் வாரீர்.

சரணங்கள்

1 மெச்சும் கல்யாண குண விமலன் துணையை நம்பி
இச்சிறு தம்பதிகள் இருவர் மணம் விரும்பி,—நிச

2 வாழ்க்கை வனத்தினிலே மலரும் மணமும் போலே
மனையறம் நடத்திட மனம் இவர் கொண்டதாலே,
—நிச்

3 செடியும் கொடியும் போலே உடலும் உயிரும் போலே,
கடி மணமாழ்வில் வரக் கருத்திவர் கொண்டதாலே,
—நிச

4 இரவியும் கதிரும்போல் எழில் பாவும் ஊடும் போலே
இருவரும் நீடுழி இனிது வாழ மண் மேலே— நிச
வீ. ஜெ.

---

109 (355) காபி ஆதிதாளம்

ப. கல்லும் அல்லவே—காயம்,—வல்லும் அல்லவே
—இது

அ. வெள்ளி, பொன் விலைமதியா மேரும் அல்லவே.
—கல்

1 வல்லமை பேசாதே, நாளை வருவதறியாய்:—அதால்
நல்ல வழிதேடி, தேவ நாமத்தைத் தியானி.— கல்

2 சூரியன் கீழ்க்கண்டதெல்லாம் மாயை அல்லவோ? சால்மோன்
பார் அறியச் சொன்னதை நீ பார்த்தறியாயோ?
—கல்

3 காற்றடித்த மேகம் புகைக் கொப்பதாகவே,—
இங்கே
போற்றிய மனுடர் ஜீவன் போய் ஒழியுமே— கல்

4 வேகமாய் வடியும் ஆற்றுக்கொப்பதாகவே,—மாய
தேக நரர் நாட்களும் சீக் கிரம் கழியுமே— கல்

5 இராப்பகல், இருள், வெளிச்சம் மாறுவண்ணமே,
—ஐயோ!
நராட்களின் மகிழ்ச்சிக்கு மா மாறுதல் உண்டே.
—கல்

6 பூவதும் உதிரும், பசும் புல்லும் வதங்கும்;—அது
போலவே நரர் உருவம் மாறி வதங்கும்.— கல்

7 மேலது கீழ், கீழது மேல் ஆம் உருளைபோல்,—நரர்
மேன்மையும் வாழ்வும் கீழது மேலும் ஆகுமே—கல்

8 நுண்ணிய ஞானி என்றாலும் கீர்த்திபெற்றா
லும்,—ஐயோ!
அன்னவன் மலையும் நேரம் யாவும் கலையும்— கல்.

9 ஆசனம், தரைத்தனம், தத்துவங்கள் ஒழியும்;—அர
சாண்டமன்னரும் ஒரு நாள் மாண்டொழி வாரே.
—கல்

10 யாவும் ஓட்டமாகப் பாயும், யாவும் அழியும்;—மெய்த்
தேவபக்தி யே செலிக்கும்; ஜீவன் நிலைக்கும்.— கல்

வே. சா.

---

110. (165) முகாரி. சாபுதாளம்.

ப. ஆரும் துணை இல்லையே எனக்
காதியான் திருப்பாலா:—உன் தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவாய், யேசு நாத.

அ சீர் உலாவு பூங்காவில் ஓர் கனி
தின்ற பாதகம் மாற்றவே,
சிலுவை மீதினிலே உயிர்விடும்
தேவனே, என் சுவாமி,— ஆரு

1 முந்து மானிடர் தந்த தீவினை முழுவதும் அற
வேண்டியே
முள்முடியுடன் குருசில் ஏறிய முன்னவா, கிருபை
கூர்வையே;
சிந்தும் உன் உதிரத்தில் என் வினை தீர்த்திரட்சியும,
ஐயனே!
தீய பாவி எனக்கு வேறொரு செயலிடம் துணை
இல்லையே!—ஆரு

2 தந்தை தாயரும், மைந்தர் மாதரும் சகலரும் உத
வார்களே;
சாகும்நாளதில் நீ அலால் எனைத் தாங்குவார்களும்
உண்டுமோ ?
சொந்தம் நீ எனக்கன்றி, வேறொரு சொந்தமானவர்
இல்லையே,
சுற்றமும், பொருள் அத்தமும் முழபத்தமே, என
தத்தனே !—ஆரு

3 கள்ளனாயினும் வெள்ளனாயினும் பிள்ளை நான் உனக்
கல்லவோ ?
கர்த்தனே, வலப்பக்க மேவிய கள்வனுக் கருள்
செய்தையே;
தள்ளி என்னை விடாமல் உன்னடி தந்துகாத்தருள்,
அப்பனே,
தயவாய் ஒரு குருசில் ஏறிய சருவ ஜீவ தயாபரா
—ஆரு

4 நன்றி அற்றவனாகிலும், எனைக் கொன்றுபோடுவ
தாகுமோ ?
நட்டமே படும் செட்ட மைந்தனின் கிட்ட ஓடின
தில்லையோ ?
கொன்றவர்க் கருள் செய்யும், என்று பிதாவை
நோக்கிய கொற்றவா,
குற்றம் ஏது செய்தாலும் நீ, எனைப்பெற்றவா,
பொறுத்தாள்வையே—ஆரு

5 பக்தியேதும் இலாது மாய சுகத்தை நாடியே
பித்தனாய்ப்
பாழிலே என்றன் நாள் எலாங் கெடுத்தேழை
யாகினேன், என்செய்வேன் ?
சத்ருவான பிசாசினால் வரும் தந்திரம் கொடி
தல்லவோ ?
தஞ்சம் அற்றவன் ஆகினேன், உன தஞ்சல் கூறும்
அனுதியே !—ஆரு

வே. சா.

111 (326) கமாஸ் ஆதிதாளம்

ப. தேவ லோகமதில் சேவிப்பார் தூயவர்கள்

அ. மாவலராகிய தேவன்றன் பலத்தால்—ரீ—
பூவினில் ஜீவித்துப் புகழுறும் ஜெயம் பெற்றார்
—தேவ

1 வானமண்டலப் பொல்லா ஆவியின் சேனையோடும்—
பல
மான துரைத்தனம், அதிகாரம், பிரபஞ்ச அதிபதி
யிவர்களோடும்
ஞானமாய்த் தேவ சர்வாயுதம் தரித்து,—ரீ—
நலமுடன் போராடி உலகினில் ஜெயங் கொண்டார்.
—தேவ

2 பட்டயம், நிர்வாணம், பசி, நாசமோசங்களும,—மா
பாடு, வியாகுலத்தோடு, உபத்ரவம் பஞ்சமும் மிஞ்சி
வந்தும்;
துட்டர்கள் கிட்டினும் மட்டில்லா அன்பரால்—ரீ—
துணிவுடன் முற்றிலும் ஜெயித்த விசுவாசிகள்—தேவ

3 பாரத்தையும் தமை நெருங்கிய பாவத்தையும,—
தள்ளிப்
பட்சமுறும் யேசுரட்சகர்மீது தம் பார்வையை
வைத்து என்றும்
வீரமாய் ஓடியே வெற்றி சிறந்தவர்—ரீ—
வேகும் அக்கினியில் உக்கிரம் அவித்தவர். —தேவ

4 ஜெயங் கொள்ளுவோர் பரதீசினில் வீற்றிருப்பார்,
—வாடா
ஜீவகிரீடம் அணிந்தாளுகை செய்வார் ஜீவகனி
புசிப்பார்,
வியப்புறு புதுநாமம், வெள்ளுடை பெற்றுமே—ரீ—
விடிவெள்ளியாய் நித்யம் விளங்கி ஜொலித்திடுவார்.
—தேவ

வே. ச

112.

ப சின்னச் சின்னப் பாலர் நாங்கள்
சிறுவர் சங்க அங்கம் நாங்கள்.

அ மன்னன் ஏசு நாதர் முன்பு
மகிழ்ந்து பிரதிக்கினை செய்திடுவோம் —சின்

1 ஏசுவின் பெலனை நம்பி
என்றும் அவர் சித்தம் செய்வோம்;
நேசனும் ஏசு எம்மை
நித்தம நடத்தும் வழி சென்றிடுவோம் —சின்

2 அன்றன்று அவரை நோக்கி
அனலாக ஜெபித்திடுவோம்;
நன்ருக அனுதினமும்
நாதனுடைய வேதம் படித்திடுவோம், —சின்

3 கர்த்தரின் கிருபையினுல்
சுத்தமாகப் பிழைத்திடுவோம்;
பக்தியில் நிதம் வளர
பரன் ஏசு மாதிரியைப் பார்த்திடுவோம். —சின்

4 சங்கத்தக் கூட்டங்கட்குத்
தவருமல் போய்வருவோம்;
பங்கு பெற்றுக் கூட்டங்களில்
எங்கள சங்கம் தழைக்க முயன்றிடுவோம். —சின்

பேரின்ப கீதம்.

113. (239)

1 யேசு கற்பித்தார் ஒளிவீசவே,
சிறு தீபம்போல இருள் நீக்கவே;
அந்தகாரலோகில் ஒளிவீசுவோம்.
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்

2 முதல் அவர்க்காய் ஒளிவீசுவோம்:
ஒளிமங்கிடாமல் காத்துக்கொள்ளுவோம்:
இயேசு நோக்கிப்பார்க்க ஒளிவீசுவோம்.
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்.

3 பிறர் நன்மைக்கும் ஒளிவீசுவோம்;
உலகின் மா இருள் நீக்க முயல்வோம்;
பாவம் சாபம் யாவும பறந்தோடிப்போம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்.

பேரின்ப கீதம்.

---

114. (254) மோகனம். ஆதிதாளம்.

ப. யேசுவைப் போல நட-என் மகனே!
யேசுவைப் போல நட-இளமையில்.— யேசு

அ. நீசமனுடர் செய் தோஷ மகற்றிட,
பாசம் நிறைந்து நற் பாலனாக வந்த— யேசு

1 பன்னிரு வயதில் அன்னை தந்தையுடன்
பண்டிகைக்கு எருசாலேம்நகர் வர,
சின்ன வயதிலே தேசிகரைக் கேட்ட
உன்னத ஞானத்தை உள்ளந்தனிலெண்ணி— யேசு

2 சொந்தமாம் நாசரேத்தூரினில் வந்தபின்
தந்தையர்க் குதவியாக வளர்ந்தனர்;
எந்தநாளுங் கோணி எதிர்த்துப் பேசாது
சிந்தை மகிழ்ந்தவர் சொற்படி நடந்த— யேசு

3 ஏனையிளைஞரோ டனைவழி செல்லா
தெவருக்கும் சிறந்த மாதிரியாய் நின்று
ஞானம் தேவ க்ருபை ஆவி பெலன் கொண்டு
நரரின் தயவிலும் நாளாய் வளர்ந்தவன்— யேசு

சா. ப.

115

(உன்றன் மீதுறும் ஆசை)

தந்தையே இந்தப்போஜனம் தன்னைத்
தந்ததற்கெங்கள் வந்தனம்
இந்த வேளைநீர் வந்துநும் அருள்
தந்து நல்பலம் தாருமே.

L. S.

---

116 (396) காம்போதி சாபுதாளம்

ப. கிறிஸ்தவ இல்லறமே—சிறந்திடக்
கிருபை செய்வீர், பரனே

அ. ப. பரிசுத்தமரியன்னை பாலன் யேசு யோசேப்புப்
பண்பாய் நடத்தி வந்த இன்பக்குடும்பம்போல,—
கிறிஸ்

ச. 1 ஜெபமென்னும் தூபமே தினம் வானம் ஏறவும்,
திருவேத வாக்கியம் செவிகளில் கேட்கவும்,
சுபஞானக் கீர்த்தனை துத்தியம்பாடவும்,
சுத நேசு தலைமையில் தூய வீடாகவும்— கிறிஸ்

2 ஊழியம் புரியவும் ஊதியம் விரும்பாமல்,
உவந்த பெத்தானியா ஊரின் குடும்பம்போல,
நாளும் யேசுபிரானை நல்விருந்தாளியாக்கி,
நாடியவர் பாதத்தில் கூடிய மர்ந்து கேட்டு— கிறிஸ்

3 அன்போ டாத்துமதாகம் அரிய பரோபகாரம்,
அருமையாக நிறைந்தே அயலார்க்கொளி விளக்காய்த்
துன்பஞ் செய்கிற பல தொத்து வியாதிகளைத்
தூரந் துரத்தும் வகை சொல்லிச் சேவையைச் செய்து— கிறிஸ்

4 மலையதின் மேலுள்ள மனையைப் போலவே,
மற்றவர்களுக்கு முன் மாதிரியாய் நின்று,
கலை உடை உணவிலும், கல்விமுயற்சியிலும்,
கர்த்தருக் கேற்ற பரிசுத்தக் குடும்பமாக.— கிறிஸ்

ல. டோ.

---

117 இந்துஸ்தான் சங். 128 ஏகதாளம்

ப. பயந்து கர்த்தரின் தூய வழியில்
நடந்து வருவோன் பாக்கிடவான்.

அ. முயன்று உழைத்தே பலனை உண்பான்
முடிவில் பாக்கியம் மேன்மை காண்பான். — பய

1 உண்ணுதற் கினிய கனிகளைத் தரும்
தண்ணிழல் திராட்சைக் கொடிபோல் வளரும்
கண்ணிய மனைவி மகிழ்ந்து இருப்பாள்
எண்ணரும் நலங்கள் இல்லத்தில் புரிவாள் — பய

2 ஒலிவமரத்தைச் சூழ்ந்து மேலே
உயரும் பச்சிளங் கன்றுகள் போலே
மெலிவிலா நல்ல பாலருன் பாலே
மிகவும் களித்து வாழ்வார் அன்பாலே

3 கர்த்தருன் வீட்டைக் கட்டாவிடில் அதைக்
கட்டுவோர் முயற்சி வீணும் அறி இதை
கர்த்தரால் வரும்சு தந்திரம் பிள்ளைகள்
கர்ப்பத்தின் கனியும் கர்த்தரின் கிருபை—பய

வீ. ப. க. சு.

118 (377) சங்கராபரணம் ஆதிதாளம்

1 அனுக்ரக வார்த்தையோடே—இப்போ-து
அடியாரை அனுப்புமையா!
மனமதில் தயவுறம் மகத்துவ பரனே!
வந்தனம் உமக்காமென்.

2 நின் திரு நாமமதில்—கேட்ட
நிர்மலமாம் மொழிகள்
சந்ததம் எமதகம் மிகபலனளித்திட
சாமி நின்னருள் புரிவாய்.

3 தோத்திரம், புகழ், மகிமை,—கீர்த்தி,
துதிகனம் தினமுமக்கே
பாத்திரமே: அதிசோபித பரனே!
பாதசரண் ஆமென்!

யோ. சி.

119 (83) சுருட்டி ஆதிதாளம்

ப. சீர் ஏசுநாதனுக்கு ஜெய மங்களம்; ஆதி
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்

அ. பாரேறு நீதனுக்கு, பரமபொற்பாதனுக்கு,
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்கு,— சீர்

1 ஆதி சருவேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்:
அகிலப் பிரகாசனுக்கு, நேசனுக்கு மங்களம்;
நீதிபரன் பாலனுக்கு, நித்திய குணாலனுக்கு,
ஓதும் அனுகூலனுக்கு, உயர் மனுவேலனுக்கு,—சீர்

2 மாணுபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்:
வளர் கலைக் கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்:
காணுன் நல்தேயனுக்குக் கன்னிமரி சேயனுக்கு,
கோணுர் சகாயனுக்குக் கூறுபெத்த லேயனுக்கு;— சீர்

3 பத்து லட்சணத்தனுக்குச் சுத்தனுக்கு மங்களம்:
பரம பதத்தனுக்குச், நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்குச் சருவாதிகாரனுக்கு,
பக்தர் உப காரனுக்குப் பரம குமாரனுக்கு— சீர்

வே சா.

---

120. (379) சௌராஷ்டிரம் சாபு

ப. மங்களம்! ஜெயமங்களம்! மகத்துவற்கு
மங்களம்! ஜெயமங்களம்!

1 எங்கும் ஒன்ருகவே இருந்திக பரங்களும்
பங்கம் இலாமலே படைத்த பிதாவுக்கும்,— மங்

2 நல்ல கதியை மாந்தர் நலமதுடன் அடையத்
தொல் உலகை ரட்சிக்கும் சுதன் ஏசுநாதர்க்கும்,
—மங்

3 சுத்திகரித்து நரர் சுக உலகம் அடையப்
பக்தர்களாக்கும் பரிசுத்த ஆவிக்கும்,— மங்

4 இம்முறை முத்தொழில் இயற்றி உலகனைத்தும்
செம்மையுடன் நடத்தும் திரியேக தேவனுக்கு—
மங்

யோ. பா.

Lenox Press, Pasumalai 1958—5000 C.

ஜெபம்

"எல்லா இருதயங்களையும் எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் உம்மில் பரிபூரணமாய் அன்புகூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணியருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்."

காலை ஜெபம்

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, இந்நாள் வரையும் எங்களைச் சுகமாய் நடத்திவந்த எங்கள் பரமபிதாவாகிய கர்த்தாவே, இந்நாளிலும் உமது மிகுந்த வல்லமையால் எங்களைக் காப்பாற்றி, நாங்கள் யாதொரு பாவத்துக்கும் உட்படாமலும், எவ்விதமான மோசத்திலும் அகப்படாமலும், உமது பார்வைக்கு நீதியாயிருக்கிறதை எப்பொழுதும் செய்கிறதற்கு, நாங்கள் செய்கிற எல்லாவற்றையும் உம்முடைய ஆளுகையினாலே நடத்தியருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

மாலை ஜெபம்

சகல பரிசுத்த விருப்பங்களுக்கும் சகல நல்ல ஆலோசனைகளுக்கும், சகல நீதியான கிரியைகளுக்கும் காரணராகிய கடவுளே, உலகம் தரக்கூடாத சமாதானத்தை உமது அடியாராகிய எங்களுக்குத் தந்தருளும். நாங்கள் உமது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மனஉற்சாகமுள்ளவர்களாயிருந்து, சத்துரு பயமில்லாமல் உம்மாலே காக்கப்பட்டு, ஆறுதலோடும் அமைதலோடும் எங்கள் ஜீவிய காலத்தைப் போக்குவதற்கு, எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

Copies can be had from

THE C.S I. MADURA—RAMNAD
DIOCESAN DEPOT
P. BOX 137, MADURAI.